REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2022 ஏப்ரல் 13 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 90 இல. 88
Wednesday 13, April, 2022
16பக்கங்கள்
30/-




## ஒற்றுமை, புரிந்துணர்வுடன் சவாலை நாம் வெற்றி கொள்ள வேண்டும்

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார மற்றும் உலகளாவிய நெருக்கடியான நிலைமையில், வரலாற்றில் மிகப் பெரிய சவாலை இலங்கையர்களாகிய நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒற்றுமையுடனும், சரியான புரிந்துணர்வுடனும் நாம் அதனை வெற்றிகொள்ள வேண்டும். சவால்களுக்கு முகம் கொடுப்பதில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஏராளம். எமது அரசாங்கத்தின் மூலம் தற்போதைய நெருக்கடியான நிலையிலிருந்து மக்களின் இயல்பு வாழ்வை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதுவருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

07

## நெருக்கடி சூழல் கடந்து செல்ல ஒன்றிணைவோம்

### பிரதமர் மஹிந்த புதுவருட வாழ்த்து



புதிதாக பிறக்கும் இத் தமிழ் சிங்கள புத்தாண்டில் நம் நல்லெண்ணங்களை அடைவதை நோக்கமாகக் கொள்வதே அனைவரது எதிர்பார்ப்பாகும். நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையை கடந்து செல்வதற்கு நாம் அனைவரும் ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையரின் தொன்மைமிகு பாரம்பரியமான தமிழ், சிங்கள புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு

06

## இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துகள்



# ஜனாதிபதி இராஜினாமா செய்தால் நாடு மேலும் சின்னா பின்னமாகும்

### நெருக்கடிக்கு ஒரே தீர்வு இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதே

லோரன்ஸ் செல்வநாயகம்



**நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து தோல்வியை சந்தித்தால் அரசாங்கம் மேலும் பலம்பெறும்**

**SLFP உபதலைவரும் முன்னாள் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு**

நாடு தற்போதுள்ள சூழ்நிலையில் ஜனாதிபதி தமது பதவியை இராஜினாமா செய்வாரானால் நாடு மேலும் சின்னா பின்னமாகுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு ஒரே தீர்வு இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்து புதிய பிரதமர் மற்றும் சர்வகட்சி அமைச்சரவை ஒன்றை உருவாக்குவதே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இத்தகைய சந்தர்ப்பத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து அது தோல்வியுற்றால் தற்போதைய அரசாங்கம் மேலும் பலமடையுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். புதிய அமைச்சரவை ஒன்றை நியமித்து தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் பின்னர் தேர்தல் நடத்தி புதிய தலைவரை தெரிவு செய்வதற்கான வாய்ப்பை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசாங்கத்துடன் இணைந்துள்ள சுயாதீன குழுவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான முக்கிய பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் போது நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள்

06

## வளமான எதிர்காலத்துக்கு புது வருடம் வழி வகுக்கட்டும்

### புதுவருட செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர்



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழல் முடிவுற்று, வளமான அமைதியான, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாளைய நாள் பிறந்து, கனவுகள் நனவாக பிரார்த்திக்கின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

06

## அத்தியாவசிய மருந்து கொள்வனவுக்கு நிதியுதவி

### உலக வங்கி அனுமதி வழங்கியது - அலி சப்ரி



அத்தியாவசிய மருந்து கொள்வனவுக்காக 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்குவதற்கு உலக வங்கி அனுமதியளித்துள்ளதாக நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே

06

## இராஜாங்க அமைச்சராக ஷாந்த பண்டார பதவியேற்பு



**பிரியங்கரவின் இராஜினாமா ஜனாதிபதியால் நிராகரிப்பு**

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஷாந்த பண்டார, சேதனப் பசளை உற்பத்தி, மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்தல், நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம்

06

## கடனுதவியைத் தொடர்ந்து பெற இந்தியாவுடன் பேச்சுவார்த்தை

### IMF, WB,ADB என்பவற்றுடன் பேச்சு

### -நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்தியாவின் கடன் திட்டத்தை மேலும் தொடர்வது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

06

## எமது நாட்டுக்காக எத்தகைய பொறுப்பையும் ஏற்கத் தயார்

### கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைப்போம்



நாட்டுக்காக எந்தவொரு பொறுப்பையும் கட்சி வேறுபாடுகளின்றி ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். அடுத்த சில நாட்களில் நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்படவில்லையாயின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது போகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டு நிலைமை

06

## இடைக்கால அரசை ஸ்தாபிக்க TNA,SLMC கட்சிகளுடன் பேச்சு



### சு.க. கலந்துரையாடும் என்கிறார் தயாசிறி

03

## 14,15,16 ஆம் திகதிகளில் தினகரன் வெளிவராது

### 17 ஆம் திகதி முதல் வழமைக்கு

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை முன்னிட்டு எமது தினகரன் நாளிதழ் மூன்று தினங்களுக்கு வெளிவரமாட்டாதென்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

நாளை 14 ஆம் திகதியும் நாளை மறுதினம் 15 ஆம் திகதியும் அதற்கு மறு தினமான 16 ஆம் திகதியும் தினகரன் நாளிதழ்

06

## 21 மில். மக்களின் நாட்டை அழித்துவிட்ட 226 பேர்

### குமார் சங்கக்கார ஆதங்கம்



வெறுமனே 226 பேர் 21 மில்லியன் மக்களை கொண்ட நாட்டை அழித்துவிட்டதாக குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார். மக்களை இவ்வாறான உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைக்கு கொண்டுவந்தது குறித்து தலைவர்கள் வேதனைப்படவில்லை வருந்தவில்லையென அவர் தெரிவித்துள்ளார். இந்த நாட்டு மக்களுக்கு அவர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வு அவசியமென தெரிவித்துள்ள குமார் சங்கக்கார, நெருக்கடியான தருணங்களில் மாத்திரம் ஐக்கியப் படாத மாறாக நெருக்கடியிலிருந்து பாடங்களை கற்று இனமத பேதங்கள்

06

## ஜனாதிபதி பதவி விலகுவது பிரச்சினைகளுக்கு தீர்வாகாது

### இடைக்கால அரசு ஊடாக முதலில் தற்காலிக தீர்வு

- உதய கம்மன்பில

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி பதவி விலகுவது தற்போதைய பிரச்சினைக்கு இறுதித் தீர்வாக அமையாது. நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இடைக்கால அரசாங்கத்தினூடாக தற்காலிக தீர்வு காண சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமென

06

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஒருபோதும் ஆதரவளிப்பதில்லை

### முன்னாள் அமைச்சர்கள் விமல், வாசு உறுதி

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதில்லையென பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்சவும் வாசுதேவ நாணயக்காரவும் தீர்மானித்துள்ளனர். அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னெடுக்கவேண்டாமென ஐக்கிய மக்கள் சக்திக்கு தெரிவித்துள்ளதாக வாசுதேவ

06

## நோன்பு நேரங்கள்



ஸஹர் முடிவு: 04.36
நோன்பு துறக்கும் நேரம்: 06.19

## போராட்டங்களை நடத்துவதனால் எந்த பயனுமில்லை

### முரளிதரன் கருத்து



போராட்டங்கள் நடத்தப்படுவதால் எந்தப் பயனுமில்லையென இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போராட்டங்கள் நடைபெறுவதனால்,

06

## பெற்றோல் தாராளமாக கையிருப்பில் உள்ளது

### சேமிப்பதும் சட்டவிரோத விற்பனையும் குற்றம்



பெற்றோல் விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது. தேவையான அளவு பெற்றோல் கையிருப்பிலுள்ளது. பொது மக்கள் தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் கொள்முதல் செய்வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமித்து வைப்பதும் விற்பனை செய்வதும்

06

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இதுவரையில் 735 பேர் கைது

### 196 பேர் விளக்கமறியல், 81 பேருக்கு வழக்கு, 493 பேர் பிணையில் விடுவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை 735 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ண நேற்று தெரிவித்தார்.

நேற்று (12) பாதுகாப்பு

06



## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பாடகர் மரணம்

அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த பிரபல ராப் இசை பாடகர் ஷிராஸ் யூனுஸ் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

நேற்று (12) அதிகாலை காலி முகத்திடலில் எதிர்ப்புப் போராட்ட களத்திலிருந்த கூட்டத்தினருக்கு மத்தியில் நிகழ்ச்சியை நிகழ்த்திய பின்னர் அவர் மாரடைப்பினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## விக்கல் வீராச்சாமி



அண்ணே, அரசு கவுந்துடுமெண்டு பாத்தா அது மேலும் ஸ்ட்ராங்கா வாற மாதிரி தெரியுது, அப்ப ஆர்ப்பாட்டத்துக்கு போனவ பாடு என்னவாகும்....

சனம் என்னத்தைச் செய்ய, அவங்க டீசல் இல்ல கேஸ் இல்ல எண்டதாலே கோபப்பட அத இவங்க சாதகமாக்கி படங்–காட்டினாங்க அவ்வளவுதான்...!!!

# சர்வதேச செய்திகள்



## இலங்கைக்கு உதவ இந்திய அரசு உறுதி

இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவர உதவுவதற்கு இந்தியா உறுதி அளித்துள்ளது.


இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லாய் இந்த உறுதியை அளித்துள்ளார். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கடந்த சில மாதங்களில் இந்தியா இலங்கைக்கு 2.5 பில். டொலர் உதவி வழங்கியுள்ளது.

“இந்தியா கொவிட்–19 தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தபோது இலங்கை பிரார்த்தனையில் ஈடுபட்டது. இலங்கை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டபோது, இந்தியா அவர்களுக்கு மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை வழங்கி உதவியது.

கொவிட்–19 தொற்றுக்கு பின்னரான பொருளாதார மீட்சி தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் நாம் நெருக்கமாக தொடர்பில் இருப்பதோடு பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டுள்ளோம்” என்று மெய்நிகர் உரை ஒன்றில் பாக்லாய் தெரிவித்தார்.

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க இந்தியா முன்வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச மாநாடு: ஐந்து சீன நாட்டவருக்கு அனுமதியில்லை



ஹொனலுலுவில் உள்ள ஆசிய கற்கைகளுக்கான சங்கம் மெய் நிகர் வழியாக ஏற்பாடு செய்திருந்த வருடாந்த மாநாடொன்றில் கலந்து கொள்ள குறைந்தது ஐந்து சீனப் புத்திஜீவிகளுக்கு அந்நாட்டு அதிகாரிகள் இடமளிக்கவில்லை என்று அமெரிக்க ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

உலகெங்கிலுமுள்ள நம்பிக்கைக்குரிய, மிகுந்த ஒழுங்கைப் பெற்றுள்ள ஆசிய கற்கைகளுக்கான புத்திஜீவிகளை உள்ளடக்கியுள்ள இச்சங்கம் பெருந்தொகையான அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

இந்த சங்கம் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளவே இவர்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்று தேசிய மக்கள் வானொலி குறிப்பிட்டுள்ளது.

என்றாலும் சர்வதேச அளவிலான மாநாடுகளில் சீன புத்திஜீவிகள் பங்கேற்க அண்மைக்காலத்தில் ஊக்குவிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த சில ஆண்டுகளாகத் தீவிரமான கட்டுப்பாடுகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### கிழக்கில் ரஷ்யா தாக்குதலுக்கு தயார்

## மேற்கத்திய நாடுகளின் ஆயுத உதவிக்கு உக்ரைன் அழைப்பு



மரியுபோல் முற்றுகையை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் எதிர்பார்க்கப்படும் கிழக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை எதிர்கொள்வதற்கு மேற்கத்திய நாடுகளிடம் இருந்து உக்ரைன் மேலும் ஆயுத உதவிகளை கோரியுள்ளது.

கடந்த ஏழு வாரங்களுக்கு மோலான முற்றுகையில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படும் துறைமுக நகரான மரியுபோலில் புதிய தாக்குதல் ஒன்றுக்காக கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யா தனது துருப்புகளை குவித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்று கடந்த திங்கட்கிழமை பின்னேரம் தனது தொலைக்காட்சி உரையில் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி எச்சரித்துள்ளார்.

“அத்தியாவசிய ஆயுதங்களை பொறுத்தவரை நாம் இன்னும் எமது பங்காளிகளிடம் தங்கியுள்ளோம். துரதிருஷ்டவசமாக இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர தேவையான, குறிப்பாக மரியுபோல் முடக்கத்தை விடுவிக்க, போதுமான ஆயுதங்கள் எமக்கு கிடைக்கவில்லை” என்று அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யா உக்ரைன் மீதான படையெடுப்பை ஆரம்பித்த பின் முதல் ஐரோப்பிய ஒன்றிய தலைவராக ஆஸ்திரிய சான்சலர் கார்ல் நெஹம்மர், ரஷ்யா ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை மொஸ்கோவில் சந்தித்துள்ளார். கிழக்கு உக்ரைனில் ரஷ்யா முழு வீச்சில் தாக்குதலுக்கு தயாராகி இருப்பதாக அவர் இந்த சந்திப்புக்குப் பின்னர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் தலைநகர் கியேவின் புறநகர் பகுதிகளில் பெரும் இழப்பை சந்தித்த பின் ரஷ்யப் படை அங்கிருந்து பின்வாங்கியது. இந்நிலையில் ரஷ்யா டொன்பாஸ் பக்கம் அவதானம் செலுத்தியுள்ளது. இங்கு உக்ரைன் பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டை பலப்படுத்த ரஷ்யா திட்டமிடுகிறது. இங்கு மரியுபோல் நகரை கைப்பற்றி கிழக்கில் உள்ள பிரதான உக்ரைன் படைகளை சுற்றிவளைக்க ரஷ்யா முயற்சித்து வருகிறது.

மரியுபோல் நகரை கைப்பற்றும் முயற்சிக்கு அப்பால், வுஹான்ஸ்கில் இருந்து மேற்காக இரண்டு மணி நேர தூரத்தில் இருக்கும் பொபாசானவை கைப்பற்ற முயற்சிப்பதாகவும், டொனட்ஸ்க் பிராந்தியத்தில் குராகொவ் பக்கம் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகவும் உக்ரைன் ஆயுதப் படைகளின் பொதுப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

## ரஷ்யாவை கைவிட 'நோக்கியா' முடிவு




தகவல்தொடர்பு நிறுவனமான நோக்கியா ரஷ்யாவிலிருந்து வெளியேறுவதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளது.

அது ரஷ்யாவிலிருக்கும் அதன் செயல்பாடுகளை நீக்குவதாகவும் கூறியது. நோக்கியா எப்போது அதன் செயல்பாடுகளை ரஷ்யாவில் மீண்டும் ஆரம்பிக்கும் என்பது தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

இவ்வாண்டு பெப்ரவரி 24ஆம் திகதியன்று உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததையடுத்து பல வெளிநாட்டு நிறுவனங்கள் ரஷ்யாவுடனான அவற்றின் தொடர்பைத் துண்டித்துள்ளன.

மனித உரிமை என்ற அடிப்படையில் தகவல்தொடர்பு போன்ற சில அத்தியாவசியத் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் ரஷ்யாவில் தொடர்ந்து செயல்படுகின்றன.

இருப்பினும் ரஷ்யாவிலிருந்து வெளியேறுவதே தனது ஒரே தெரிவு என்று நோக்கியா தீர்மானமாகத் தெரிவித்துள்ளது.

## பலஸ்தீனர் சுட்டுக்கொலை



பொலிஸ் அதிகாரி மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்த முயன்றதாக குற்றம்சாட்டி துறைமுக நகரான அஸ்கலானில் இஸ்ரேலிய பொலிஸாரால் பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வேலைத் தளம் ஒன்றுக்குள் நுழைந்த இஸ்ரேலிய பொலிஸார் பலஸ்தீனர்களின் அனுமதிப்பத்திரத்தை சோதித்து வந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனது 40 வயதுகளில் இருக்கும் பலஸ்தீனர் ஒருவரே இதன்போது கொல்லப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் நான்கு துப்பாக்கிச்சூடு, கத்திக்குத்து காரை மோதவிட்டு தாக்குதல் என இஸ்ரேலிய நகரங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே காலப்பகுதியில் இஸ்ரேலிய படையினரால் குறைந்தது 15 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## நேபாளத்தில் அந்நிய செலாவணி வீழ்ச்சி: இறக்குமதிக் கட்டுப்பாடு



அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்ததை அடுத்து கார்கள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் தங்கம் உட்பட அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நேபாளத்தில் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசின் கடனை செலுத்துவதற்கு உதவும் சுற்றுலா வருவாய் மற்றும் வெளிநாட்டில் வேலை புரியும் நேபாளியர்கள் அனுப்பும் பணம் வீழ்ச்சி அடைந்த நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் மத்திய வங்கி ஆளுநர் கடந்த வாரம் பதவி நீக்கப்பட்டார்.

இலங்கையின் நெருக்கடியுடன் இந்தப் பிரச்சினையை ஒப்பிடுவது பற்றி தாம் அதிர்ச்சி அடைவதாக நேபாள நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி நடுப்பகுதி வரை ஏழு மாதங்களில் வெளிநாட்டு நாணய கையிருப்பு 16 வீதத்துக்கு சரிந்து 1.17 டிரில்லியன் நேபாள ரூபாவாக உள்ள (9.59 பில்லியன் அமெரிக்க டொலர்) என்று நேபாள மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் வெளிநாட்டில் உள்ள நோபளியர் அனுப்பிய பணம் சுமார் 5 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

நாட்டின் ஒள அந்நியச் செலாவணி அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக நிறுவனம் நம்புகிறது என்று நேபாள மத்திய வங்கியின் பிரதம ஊடகப்பேச்சாளர் நாராயன் பிரசாத் ரோய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

“அத்தியாவசிய பொருட்களின் விநியோகத்தை பாதிக்காத வகையில் அத்தியாவசியமற்ற பொருட்களின் இறக்குமதியை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்று அவர் குறிப்பிட்டார். முழுமையான கட்டணத்தையும் செலுத்துவதாக இருந்தால் 50 ஆடம்பர பொருட்களை கொண்டுவர அனுமதி அளிக்கப்படும் என்று அவர் கூறினார்.

“இது இறக்குமதியை தடை செய்வதல்ல அதனை பலவீனப்படுத்துவதாகும்” என்றும் அவர் மேலும் கூறினார்.

எனினும் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் நேபாளத்தின் கடன் குறைவாக உள்ளது என்று அந்நாட்டு நிதி அமைச்சர் ஜனார்தன் ஷர்மா தெரிவித்துள்ளார். “மக்கள் ஏன் இலங்கையுடன் ஒப்பிடுகிறார்கள் என்பது எனக்கு அதிர்ச்சியாக உள்ளது” என்றும் கூறினார்.

## பிலிப்பைன்ஸில் பயங்கர புயல்: 25 பேர் உயிரிழப்பு



பிலிப்பைன்ஸில் மெகி வெப்பமண்டல புயல் தாக்கியதை அடுத்து ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு கடற்கரை பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்கு மீட்புக் குழுவினர் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

உள்நாட்டில் அகடோன் என்று அழைக்கப்படும் மெகி புயல் மணிக்கு 65 கிலோமீற்றர் வேகத்தில் பிலிப்பைன்ஸ் தீவுக்கூட்டத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கியது.

இந்த ஆண்டில் பிலிப்பைன்ஸை தாக்கும் இவ்வாறான முதல் புயல் இதுவாகும். அந்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 20 புயல்கள் தாக்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் மோசமாக பாதிக்கப்பட்ட லெய்டே மாகாணத்தில் நிலச்சரிவு ஒன்றில் புதையுண்ட 22 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக உள்ளூர் நிர்வாகம் குறிப்பிட்டது. 17,000க்கும் அதிகமானோர் வீடுகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தெற்கின் டவாவோ பிராந்தியத்தில் மேலும் குறைந்தது மூவர் உயிரிழந்திருப்பதாக தேசிய அனர்த்த முகாமை உறுதி செய்துள்ளது.

மேலும் சிலரை இன்னமும் காணவில்லை. கடும்புயலால் கனத்த மழை பெய்ததில் வெள்ளம் பெருக்கெடுத்தது.

## இரு புதிய கொவிட் தொற்று துணைரகங்கள் பற்றி ஆய்வு



ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபுடன் தொடர்புடையதாக புதிதாக உருவெடுத்துள்ள இரண்டு துணைரகங்களை ஆராய்வதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

பி.ஏ.4, பி.ஏ.5 ஆகிய துணைரகங்கள் மேலும் ஆபத்தானவையா, எளிதில் பரவக்கூடியவையா என்பது குறித்து ஆராயப்படுவதாகக் கூறப்பட்டது.

மனிதர்களின் தடுப்பாற்றலை மிஞ்சக்கூடிய அளவில் துணைரகங்களுக்கு ஆற்றல் இருக்கிறதா என்பதை மேலும் ஆராய வேண்டும் என்றும் அந்த அமைப்பு கூறியது.

பி.ஏ.1, பி.ஏ.2, பி.ஏ.1.1, பி.ஏ.3 ஆகிய துணைரகங்கள் ஏற்கனவே கண்காணிக்கப்படுகின்றன. உலகளவில் சோதிக்கப்பட்ட மாதிரிகளில் பி.ஏ.2 துணைரகமே அதிகம் தென்படுகிறது.

இருப்பினும், அதன் வீரியம் அவ்வளவாகக் கடுமையானது இல்லை என்று தெரியவந்துள்ளது.

பி.ஏ.4, பி.ஏ.5 ஆகிய துணைரகங்கள் தொடர்பில் 10க்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தென்னாபிரிக்கா, டென்மார்க், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் இந்த வகை வைரஸ் அடையாளம் காணப்பட்டது.

## யோசப் கல்லறை மீது பலஸ்தீனர் தாக்குதல்



பைபிளில் வரும் யோசப்பின் அடக்கஸ்தலம் என்று நம்பப்படும் இடம் பலஸ்தீனர்களால் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் நப்லுஸ் நகரில் இருக்கும் இந்தத் தலம் மீதான தாக்குதல், “வெறித்தனமாக அழிப்பு நடவடிக்கை” என்று இஸ்ரேல் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாட்களாக இடம்பெற்று வரும் தாக்குதல்கள் மற்றும் பதற்ற சூழவில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கு கடும் பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இஸ்ரேல் உறுதி அளித்துள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமையே இந்தக் கல்லறை சேதப்படுத்தப்பட்டுள்ளது. கல்லறைக்கு மேலால் தொங்கும் விளக்கை பலஸ்தீனர்கள் தாக்கும் வீடியோ சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளது.

இந்தக் கல்லறையை யூதர்கள் பெரிதும் மதிப்பதோடு, இது யோசப் அல்லது 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷெய்க் யூசுப் தாவிக்காத் இஸ்லாமிய அறிஞருடையது என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 13 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

12 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.48 |
| லுஹர் | 12.13 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் பங்குனி 30

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 12.00 - 01.30வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# சித்திரை புத்தாண்டு சுபகிருது வருஷப் பிறப்பு

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 7.50 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது. திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்**

மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

பவளம்,புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்**

புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

**தோஷ நட்சத்திரம்**

பரணி, மகம், பூரம் ,உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம்,திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15 .04.2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு_ புண்ணிய காலம்**

14.04.2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு_ புண்ணிய காலம்**

14.04.2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

**மருத்து நீர்**

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடம்ப இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

# இடைக்கால அரசை ஸ்தாபிக்க TNA, SLMC கட்சிகளுடன் பேச்சு

## சு.க. கலந்துரையாடும் என்கிறார் தயாசிறி

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



புதிய பிரதமரின் தலைமைத்துவத்தின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோமென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேக்கர தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் கருத்துக்கமைய ஜனாதிபதி பதவி விலகினால் பாராளுமன்றத்தினூடாக இடைக்கால ஜனாதிபதி நியமிக்கப்பட வேண்டும். தற்போதைய பாராளுமன்றத்தில் செயற்பாடுகளுக் கமைய விரைவாக இடைக்கால ஜனாதிபதி நியமனம் நடைபெறும் என்பது சாத்தியமற்றதென்றும் அவர் தெரிவித்தார்.

ராஜபக்ஷமார் இல்லாத அரசாங்கத்தையே நாட்டு மக்கள் கோருகிறார்கள். ஊழல் மோசடியாளர்களுடன் ஒன்றிணைந்து ஆட்சியமைத்தால் சர்வதேசத்தின் உதவியையும் இனி பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை தோற்றம் பெறும். நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணவே இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயற்சிக்கிறோமென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேக்கர தெரிவித்தார்.

என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டு மக்களின் அடிப்படை தேவைகளுக்கும், மக்களின் கருத்துகளுக்கும் அரசாங்கம் முன்னுரிமை வழங்காததன் விளைவு முழு நாட்டுக்கும் தற்போது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

**ஆணைமடு தேர்தல் தொகுதியின்**

# அபிவிருத்தி குழு தலைவராக பியங்கர ஜயரத்ன நியமனம்

புத்தளம் மாவட்டத்தின் ஆணைமடு தேர்தல் தொகுதியின் ஆணைமடு, நவகத்தேகம, பல்லம மற்றும் கருவலகஸ்வெள பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் பதவிக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்னவுக்கு (11) அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ.திசாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ரமழான் சிந்தனை**

# நோன்பு துறக்கும் வேளையின் சிறப்பு

மனித வாழ்வுக்கு தேவையான அனைத்து வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி கொடுத்துள்ள அல்லாஹ்தஆலா அவனது ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கு தேவையான நேர்வழிகாட்டலையும் வழங்கியுள்ளான். அத்தோடு மனிதனது தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றி வைப்பதற்கும் அவன் தயாராகவே இருக்கின்றான். இதனை அவன் தன் அருள்மறையில், '(நபியே!) உங்களிடம் என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றிக் கேட்டால் (அதற்கு நீங்கள் கூறுங்கள்) 'நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கின்றேன். (எவரும்) என்னை அழைத்தால் அந்த அழைப்பாளரின் அழைப்புக்கு விடையளிப்பேன்'. ஆதலால் அவர்கள் என்னிடமே பிரார்த்தனை செய்யவும் என்னையே நம்பிக்கை கொள்ளவும், (அதனால்) அவர்கள் நேரான வழியை அடைவார்கள். (அல் குர்ஆன் 02:186) என்று குறிப்பிட்டுள்ளான்.

இவ்வசனத்தின்படி, மனிதன் தன் தேவைகள், எதிர்பார்ப்புகள் அனைத்துக்கும் அல்லாஹ்வையே நாட வேண்டும். அவனையே அழைக்க வேண்டும். அவனையே நம்பி செயற்பட வேண்டும். அவன் மனிதனுக்கு சமீபமாக இருப்பவன். மனிதனின் அழைப்புக்கு பதிலளிக்கவும் தயாராக இருக்கின்றான். இது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயம். அதேநேரம் மனிதனின் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கான கால நேரங்களையும் சந்தர்ப்பங்களையும் அவன் ஏற்படுத்தியும் வைத்திருக்கின்றான். அந்த வகையில் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'மூவருடைய பிரார்த்தனை மறுக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்களில், 'நோன்பாளி நோன்பு துறக்கும் போது கேட்கப்படும் பிரார்த்தனை' என்றும் கூறியுள்ளார்கள். 'இவர்களது பிரார்த்தனைகள் மேகங்களின் மேல் சுமந்து செல்லப்படும். வானங்களின் கதவுகள் அதற்காகத் திறக்கப்படும். இறைவன் கூறுவான், 'எனது மாட்சிமையின் மீது சத்தியமாக தாமதித்தாலும் நிச்சயமாக நான் உதவுவேன்' என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

இந்நபிமொழி நோன்பு துறக்கும் நேர காலத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் எடுத்தியம்புகிறது. இதனை உணர்ந்து கொள்ளும் எவரும் இக்காலப் பகுதியை ஒரு போதும் வீண் போகவிட மாட்டார்கள். அதனால் நோன்பு துறக்கும் நேர காலத்தில் தம் தேவைகள், எதிர்பார்ப்புக்களை உரிய ஒழுங்கில் பிரார்த்தனைகளாக அல்லாஹ்விடம் முன்வைப்போம். அவனது அருள்களை அடைந்து கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

# விமான நிலைய ஊழியருக்கு ரூ 25,000 புதுவருட முற்பணம்

## தொழிற்சங்க போராட்டம் முடிவுற்றது

புத்தாண்டு கொடுப்பனவு கோரி விமான நிலையம் மற்றும் விமான சேவை ஊழியர்கள் நேற்றுக் காலை ஆரம்பித்த தொழிற்சங்கப் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

30,000 ரூபா புத்தாண்டுக் கொடுப்பனவு வழங்கக் கோரி விமான நிலைய வளாகத்துக்குள் போராட்டத்தை ஆரம்பித்தனர். தொழிற்சங்கங்கள் மற்றும் விமான நிலைய அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து புத்தாண்டுக் கொடுப்பனவாக 25,000 ரூபாவை வழங்க இணக்கம் காணப்பட்டது.







தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 30ம் நாள் புதன்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

*நினைப்பதெல்லாம் உயர்ந்த நினைப்பாகவே இருக்க வேண்டும். அது கைகூடாவிட்டாலும் அதற்காக அந்த நினைப்பை விடக் கூடாது.*

## ஐக்கியம், சுபிட்சம் மேலோங்க புத்தாண்டில் வழி பிறக்கட்டும்!

தமிழ்-சிங்கள புத்தாண்டான சுபகிருது வருஷம் நாளை காலை பிறக்கின்றது. நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக அசாதாரண நிலைமை நிலவுகின்ற தற்போதைய வேளையில், சித்திரைப் புத்தாண்டை இவ்வருடம் தமிழ், சிங்கள மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.

தமிழ், சிங்கள மக்களால் கடந்த இருவருட காலமாக சித்திரைப் புத்தாண்டை கோலாகலமாகக் கொண்டாட முடியாமல் போயிருந்தது. உலகப் பெருந்தொற்றான கொவிட் பரவல் காரணமாக எமது நாடும் முடங்கிப் போயிருந்த காரணத்தினால், மக்கள் கடந்த இரு புத்தாண்டுகளை தத்தமது வீட்டில் இருந்தவாறே அமைதியாகக் கொண்டாடியிருந்தனர்.

கொவிட் தொற்று தற்போது பெருமளவு தணிவு நிலைமைக்கு வந்துள்ள போதிலும், இம்முறையும் சித்திரைப் புத்தாண்டை சிறப்பாகக் கொண்டாட முடியாதவாறு நாட்டில் அசாதாரண நிலைமையொன்று நிலவுகின்றது. எமது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருவதனால் சித்திரைப் புத்தாண்டு இம்முறையும் சோபையிழந்துள்ளதென்றே கூற வேண்டியுள்ளது.

கடந்த இரு வருட காலமாக கொவிட் பெருந்தொற்று காரணமாக நாடு தொடர்ச்சியாக ஒருவித முடக்க நிலைமையிலேயே இருந்து வந்தது. உல்லாசப் பயணத்துறை முற்றாக ஸ்தம்பிதமடைந்து போனதாலும், அந்நிய செலாவணி இழப்பு மற்றும் உள்நாட்டு வருமானம் இழக்கப்பட்டதனாலும் நாட்டின் தேசிய வருமானம் முற்றாகவே பாதிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதார மூலங்கள் தடைப்பட்ட போதிலும், கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதிலோ அல்லது மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதிலோ அரசாங்கம் ஒருபோதுமே தவறிழைக்கவில்லை. அது மாத்திரமன்றி, கொவிட் பாதிப்பில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் அரசாங்கம் துரிதமாகவே செயற்பட்டதுடன், அந்நடவடிக்கைக்காக சர்வதேசத்தின் பாராட்டையும் பெற்றிருந்தது.

இரு வருட காலமாக நாட்டின் தேசிய வருமானம் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் நலனுக்காக பெருந்தொகை நிதியைச் செலவிட்டதன் காரணமாகவே இன்று நிதிநெருக்கடி தோன்றியுள்ளது. நாட்டில் டொலர் பற்றாக்குறைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களுக்கு விலையுயர்வும் ஏற்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பாதிக்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.

இவ்வாறான அசாதாரண வேளையில், அரசாங்கம் கொவிட் முடக்க காலத்தில் மக்கள் நலனுக்காக ஆற்றிய பணிகளை ஒவ்வொரும் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். கொவிட் நெருக்கடி காலப்பகுதியில் மக்களை அரசு கைவிட்டதில்லை. மக்கள் நலனுக்காக நாட்டின் நிதியை பெருமளவில் செலவிட்டதன் காரணமாகவே இன்றைய பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளதென்பதை மக்கள் அனைவரும் புரிந்து கொள்வது அவசியம்.

நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியும், சுமுகமற்றதொரு நிலைமையும் வெகுவிரைவில் நீங்கி விடுமென்று இன்றைய சித்திரைப் புத்தாண்டு தினத்தில் நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கை கொள்வோம். அவ்வாறான மனஉறுதியுடன் தமிழ், சிங்களப் புத்தாண்டை நாம் வரவேற்போம். சகிப்புத் தன்மையும் நம்பிக்கைகளுமே இன்றைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நமக்கெல்லாம் கைகொடுக்குமென்பதை மறந்து விடலாகாது.

எமது தேசத்தைப் பொறுத்தவரை சித்திரைப் புத்தாண்டென்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையின் பிரதான பண்டிகையாக இப்புத்தாண்டைக் கொள்ள முடியும். இரு வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற, இரு வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற தமிழர்களும் சிங்கள மக்களும் கொண்டாடுகின்ற பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டு விளங்குகின்றது. அதுவே இன்றைய புத்தாண்டுக்கான சிறப்பும் தனித்துவமும் ஆகும்.

இலங்கையில் வாழ்கின்ற சிங்களவர்களும், தமிழர்களும் மதத்தாலும் மொழியாலும் வேறுபட்டவர்களாக இருந்த போதிலும் சமய மற்றும் பாரம்பரிய கலாசார ரீதியாக அவர்களுக்குள் நிறைய ஒற்றுமைகள் உள்ளன, பாரம்பரிய பிணைப்புகளும் காணப்படுகின்றன. இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்கும் இடையே நெருக்கம் உள்ளது. அவ்விரு மதங்களின் பூர்வீகம் இந்தியா ஆகும். அம்மதங்களால் பின்பற்றப்படுகின்ற வழிபாட்டு முறைகளும் ஒன்றாகவே இருக்கின்றது.

அதே போன்று அவ்விரு மொழிகளுக்கிடையேயும் பலவிதமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. தமிழர்கள் மற்றும் சிங்கள மக்களின் பூர்வீகம் இந்தியா என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனவேதான் இவ்விரு இனங்களும் மிக நெருங்கிய சமய கலாசார தொடர்புகளைக் கொண்டதாக விளங்குகின்றன. பௌத்த பெருமானை இந்துக்கள் வழிபடுவதும், இந்து தெய்வங்களை பௌத்த மக்கள் வழிபடுவதும் தொன்றுதொட்டு நாம் கண்டு வருகின்ற நடைமுறைகளாகும்.

கடந்த கால அரசியல் தலைவர்களின் தவறான வழிநடத்தல்களின் விளைவாகவே தமிழ், சிங்கள இனமக்கள் அந்நியப்பட்டுப் போனார்கள். அவ்வினங்களுக்கிடையிலான பிளவை நீக்கி, பாரம்பரிய இணைப்பை கட்டியெழுப்புதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். நாட்டின் நிரந்தர ஐக்கியத்துக்கு அதுவே முதல் வழியாகும்.

அதற்கான மனஉறுதிப்பாட்டை இன்றைய தமிழ், சிங்களப் புத்தாண்டில் இரு இன மக்களும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சித்திரைப் புத்தாண்டானது எமது தேசத்தில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் சுபிட்சம் தர வேண்டுமென இன்றைய நன்னாளில் வாழ்த்துகின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# மக்களின் இன்றைய சிரமங்களை நாம் நன்கு புரிந்து கொண்டுள்ளோம்

## நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்கு நேற்றுமுன்தினம் இரவு ஆற்றிய விசேட உரை



*நண்பர்களே!*

*எங்கள் நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கும் இந்தத் தருணத்தில், உங்கள் மத்தியில் உரையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 50 ஆண்டு காலத்துக்கும் மேலான எனது அரசியல் வாழக்கையில் மிகவும் தீர்மானம் மிக்க அரசியல் மைல்கற்களை கடந்து வந்துள்ளேன் என்பதைக் குறிப்பிட வேண்டும்.*

*கொரோனா தொற்றுநோய்க்குப் பின்னர் நாம் எதிர்கொள்ள வேண்டி நேரிட்ட பொருளாதாரப் பிரச்சினைகளை நம் நாட்டு மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள் என நான் நம்புகிறேன். இத்தொற்றுநோய் தாக்கத்திலிருந்து நம் மக்களை எம்மால் பாதுகாக்க முடிந்த போதும், தற்போது எங்கள் நாடு சவால்களுக்கு உட்பட்டு இருப்பதை எம்மால் உணர முடிகின்றது.*

## 'உங்கள் அனைவரதும் பொறுமையும் தைரியமும் இச்சந்தர்ப்பத்தில் நாட்டுக்குத் தேவை'

*நாடு முடக்கப்பட்டதோடு அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்ததுடன், வெளிநாட்டுக் கையிருப்பு சிதைவடைந்தது என்பதை நான் கூறித் தெரிய வேண்டியதில்லை. கடலில் எண்ணெய் கப்பல்கள் கண்களுக்கு எட்டும் தூரத்தில் இருந்த போதும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கான டொலர் எம்மிடம் இல்லாததால் பொதுமக்கள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாவதற்கு நேரிட்டுள்ளது.*

*யுத்தத்தை வெற்றி கொண்டு 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் மக்களுக்கு ஆற்றிய உரை, தற்போது எனது நினைவிற்கு வருகின்றது. அன்று 'மின்சாரத் தடையில்லாத நாடொன்றை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவோம்' என நான் கூறினேன். அதற்காக நாம் மின் உற்பத்தி நிலையங்களை அமைத்து செயலாற்றிய போதும், கடந்த அரசாங்கம் எமது வேலைத்திட்டத்தை முன்னோக்கிக் கொண்டு செல்லாமையினால் அந்த எதிர்பார்புகளை எம்மால் பூர்த்தி செய்ய முடியாமல் போனது.*

*எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பல நாட்களாக வரிசையில் நிற்கும் மக்களின் கஷ்டம் எமக்கு நன்கு புரிகின்றது. எரிவாயுவை பெற்றுக் கொள்ள வரிசையில் நின்ற பெண்களின் வேதனையை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. பொருட்களின் விலை, விண்ணைத் தொடும் அளவுக்கு அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அனுபவித்து வரும் துன்பம் குறித்து நம் அனைவருக்கும் நல்ல புரிதல் உள்ளது.*

*அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என நாம் சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தோம். ஆனால் வரவில்லை. இந்தத் தருணத்தில் கட்சி குறித்து சிந்திப்பதை விட நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே நம் அனைவரதும் பொறுப்பாகும்.*

*யார் பொறுப்பை ஏற்காவிடினும் ஆட்சியிலுள்ள கட்சி என்ற வகையில் நாம் அந்த இறுதிப் பொறுப்பை ஏற்க வேண்டும். நாம் இப்பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுத் தருவோம்.*

*30 ஆண்டு கால பயங்கரவாத அச்சுறுத்தலை இல்லாதொழித்து, இந்நாட்டு மக்களின் மனதில் இருந்த பயம் அகற்றப்பட்டது. இதுபோன்று துன்பத்தில் மக்களை தள்ளுவதற்காக அல்ல அது. மக்களாகிய உங்களை வரிசையில் நிறுத்துவதற்காக நாம் வீதிகளையும், அதிவேக நெடுஞ்சாலைகளையும் அமைக்கவில்லை. எண்ணெய்க் கப்பல்களை தடுத்து நிறுத்தி வைப்பதற்காக துறைமுகங்களை நாம் அமைக்கவில்லை.*

*ஏனைய நாடுகளில் கொரோனா தொற்று நோயால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்த வேளையில், அனைத்து வசதிகளையும் கொண்ட கொரோனா தொற்றுநோய் தடுப்பு நிலையங்களை அமைத்து, கொத்தமல்லி நீர் தொடக்கம் உணவு, மருந்து ஆகியவற்றை வழங்கி முழு நாட்டிற்கும் தடுப்பூசியையும் பெற்றுக் கொடுத்து மக்களின் உயிரை பாதுகாத்தது, கண்ணீர்ப் புகைக்கும், துப்பாக்கித் தோட்டாக்களுக்கும் மக்களைப் பலி கொடுப்பதற்கல்ல. நம் நாட்டின் அனைத்து பிரச்சினைகளின் போதும் மக்களின் உயிர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்த அரசியல் வரலாற்றை நாம் கொண்டுள்ளோம்.*

*இந்த நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.*

*பொதுமக்களுடன் இணைந்து தைரியமாக பணியாற்றி, இலங்கையை கடனற்ற நாடாக மாற்றுவதற்காகவே வெளிநாடுகளிலிருந்து கடன்களை பெற்றுக் கொள்வதை இந்த அரசாங்கம் மட்டுப்படுத்தியது.*

## 'கொரோனா தொற்று வேளையில் நாடு முடக்கப்பட்டு, அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்ததுடன், வெளிநாட்டுக் கையிருப்பு சிதைவடைந்ததாலேயே இன்று இந்நிலைமை'

*மிகவும் இக்காட்டான சூழ்நிலைகளிலும் வெளிநாடுகளிலிருந்து உதவிகளை பெற்றுக் கொள்ளும் போது, நாட்டின் சுயாதீனத்தை பாதுகாத்து உதவிகளை பெற்றுக் கொள்வதற்கே நாம் எப்போதும் முயற்சித்தோம். அதனால்தான், பாரிய அளவு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இருந்த போதும் பொது மக்களின் ஆணைக்கு மதிப்பு கொடுத்து அவற்றை நாம் மேற்கொள்ளாமல் இருந்தோம்.*

*இந்நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையை சிதைக்காத வகையிலான தீர்மானத்தை மேற்கொள்வதே மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த எமது பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காகவே நாம் தொடர்ந்தும் சேவையாற்றிக் கொண்டு இருக்கின்றோம். கிடைக்காமல் போவதும், கைவிடுவதும் கூட அரசியலில் எமக்கு மிகவும் பழக்கப்பட்டதொரு விடயமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

*பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் வேண்டாம் என்ற மக்களின் கோஷம் எமக்கும் கேட்கின்றது. அதனூடாக கூற வருவது, இந்த ஜனநாயக முறையை மறுப்பதாயின் அதன் பயங்கரமான வரலாற்றை புரிந்து கொள்ள வேண்டும். பாராளுமன்றத்துக்கு குண்டு வீசி முழு பாராளுமன்றத்தையும் அழிப்பதற்கான முயற்சியினால் ஏற்பட்ட விளைவை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.*

*அன்று பாராளுமன்றத்தில் ஜனநாயகம் மறுக்கப்பட்டதன் விளைவால், வீதியெங்கிலும் இளைஞர்களின் இரத்தம் வழிந்தோடியது. டயர்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். 1988 மற்றும் 89 களில் 60ஆயிரத்துக்கும் அதிகமான இளம் உயிர்களை நம் நாடு இழக்க நேரிட்டது. அன்று நாம் எமது இளைஞர்களின் உயிர்களை காப்பதற்காக மேற்கொண்ட கஷ்டம் உங்கள் மூத்தோர்களின் நினைவிலிருக்கும் என்பதை நாம் அறிவோம்.*

## 'இந்த நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்'

*தெற்கு போன்றே வடக்கு இளைஞர்களுக்கும் நான் அது குறித்து ஞாபகப்படுத்த வேண்டும். அந்த கடந்த காலத்தை உங்களது பெற்றோர் மற்றும் மூத்தோர்களிடம் கேட்டறிந்து கொள்ளலாம். பாராளுமன்றம் வேண்டாம், தேர்தல் வேண்டாம் என்று மக்கள் பிரதிநிதிகளை வீதிகளில் கொன்றே, 1970_80 களில் வடக்கு இளைஞர்கள் ஆரம்பித்தனர்.*

*அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அரசியல் இயக்கத்தினால் 30 ஆண்டு காலமாக வடக்கில் மட்டுமல்ல தெற்கு மக்களும் கஷ்டத்தை அனுபவித்தனர். கண்ணிவெடிகளுக்கும், துப்பாக்கித் தோட்டாக்களுக்கும் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர். அவர்கள் இருந்த அடையாளமே தெரியாமல் போனது. கொஞ்சம் கொஞ்சமாக பாடசாலை மாணவர்களையும் போராட்டங்களுக்கு இழுத்துச் செல்ல ஆரம்பித்தனர். அடுத்ததாக, மாணவர்களை பலவந்தமாக யுத்தத்திற்கு இழுத்துச் சென்றார்கள். அன்றும் பாராளுமன்றம் வேண்டாம் என்றே ஆரம்பித்தார்கள். அவற்றின் விளைவை அறிந்தமையால், நீங்கள் பிறந்த, நீங்கள் வாழும் இந்த நாட்டை மீண்டும் அந்த இருண்ட யுகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று அன்பார்ந்த பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்கிறோம்.*

*இன்று நாம் முகங்கொடுத்துள்ள நெருக்கடியை வெற்றி கொள்ள பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவே ஜனாதிபதியாலும், அரசாங்கத்தினாலும் ஒவ்வொரு நிமிடமும் செலவிடப்பட்டு வருகிறது. வரலாற்றில் விவசாயிகளுக்கு அதிக சலுகைகளை வழங்கிய எமக்கு தற்போது விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். என்னதான் நாட்டிற்கு நல்லது என்றாலும் சேதனப் பசளை வேலைத்திட்டத்தை கொண்டு செல்ல இது சரியான தருணம் அல்ல. அதனால் நாம் மீண்டும் உரமானியத்தை வழங்கத் தீர்மானித்துள்ளோம். தாங்கிக் கொள்ள முடியாத வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்று, கடதாசி பற்றாக்குறை வரை முகங்கொடுத்து வருகின்ற இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். இரண்டு மூன்று நாட்களில் முடியாவிடினும் கூடிய விரைவில் இந்த நெருக்கடிக்கு இட்டுச் செல்லும் பாதையை முடிவுக்கு கொண்டுவர நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.*

*நீங்கள் வீதியில் போராடும் ஒவ்வொரு விநாடியும் எமது நாட்டிற்கு டொலர் கிடைக்கும் சந்தர்ப்பம் இல்லாது போகின்றது. பாரிய மறுசீரமைப்பு செய்வதற்கு முன்பாக தேசத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த அழிவிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அதற்கு பலமுள்ள தைரியமுள்ள அனைவருக்கும் நாம் ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளோம். உங்கள் அனைவரதும் பொறுமையும் தைரியமும் இச்சந்தர்ப்பத்தில் நாட்டிற்கு தேவை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

*அன்பார்ந்த பிள்ளைகளே, நீங்கள் அனைவரும் தாய்நாட்டை மிகவும் நேசிக்கிறீர்கள் என்பதை நாம் அறிவோம்.*

*அன்று பீதியிலிருந்த இளைஞர்களைக் காப்பாற்றுவதற்கு பாதயாத்திரை செல்லும் போது கால்களில் குத்திய மணல் கற்களை விட அதிகமாக என் மீதும் எனது குடும்பத்தினர் மீதுமான அவமானங்களை இன்று நான் சந்திக்கிறேன். அவற்றை என்னால் தாங்கிக் கொள்ள முடியும்.*

*எனினும், நாட்டிற்காக சேவையாற்றும் முப்படையினரையும், பொலிஸ் சேவையில் ஈடுபடுபவர்களையும் அவமதிக்காதீர்கள். இன்று நீங்கள் சுதந்திரமாக பயமில்லாமல் வீதிகளில் பயணிப்பதும், எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுவதும் இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்து நாட்டை காப்பாற்றியமையினாலேயே ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.*

*அதேபோன்று கொரோனா தொற்றிலிருந்து உங்களை காப்பாற்றுவதற்கும் இந்த இராணுவ வீரர்கள் போரடினார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் என கேட்டுக் கொள்கிறேன்.*

*பிள்ளைகளே, உங்கள் எதிர்ப்பு போராட்டங்களில் தேசியக் கொடியை வைத்திருப்பதை நான் காண்கிறேன். நாம் பிறந்த இந்த பூமியில் எந்தவொரு இடத்திற்கும் தேசியக் கொடியை கொண்டு சென்று ஏற்றி வைப்பதற்கான நாட்டை நாம் உருவாக்கிக் கொடுத்தோம். அன்று அந்த சவால்களுக்கு முகங்கொடுத்த தைரியமும் துணிச்சலும் இன்றும் எமக்கு உள்ளது.*

## 'நீங்கள் பிறந்த, நீங்கள் வாழும் இந்த நாட்டை மீண்டும் இருண்ட யுகத்திற்குக் கொண்டு செல்ல வேண்டாம் என்று அன்பார்ந்த பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்கிறோம்'

(பிரதமர் ஊடகப் பிரிவு)



# உலகெங்கும் அமைதி, ஐக்கியம் மலர்வதற்கு தமிழ், சிங்கள புத்தாண்டில் பிரார்த்திப்போம்!

தமிழ், சிங்கள புதுவருடமான சுபகிருது வருடம் நாளை பிறக்கின்றது. இந்தப் புதுவருடப் பிறப்பானது தமிழர்களின் காலக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது. புதுவருட தினத்தைச் சித்திரைப் புத்தாண்டு, தமிழ் வருடப் பிறப்பு என்று நாம் சிறப்புப் பண்டிகையாக, சம்பிரதாய சடங்குகளுடன் கொண்டாடுவது வழமையாகும்.

ஒவ்வொருவரதும் வாழ்வோடு ஒட்டிய காலக் கணிப்பின்படி வாழ வேண்டிய வழிகளை ஆண்டு தோறும் வகைப்படுத்தி, வழியமைத்துக் கொள்ள அடியெடுத்து வைக்கும் வருடத்தின் முதல் நாளாக சித்திரைப் புத்தாண்டு தினம் அமைகின்றது.

ஒவ்வொருவரதும் வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பது காலமாகும். காலத்தை கணித்துக் கொண்டு தம் செயலை நேரத்தில் ஆற்றுவது வாழ்வின் வெற்றிக்கு வழி செய்யும். காலத்தின் பெறுமதியைப் பலரும் வியந்து கூறியுள்ளது போன்று, அதை அனுசரித்து நடக்க வேண்டியதையும் வலியுறுத்தியுள்ளனர்.

காலத்தைக் கணிப்பிடும் பண்டுதொட்டு வரும் பண்பட்ட பெருமையை வெளிப்படுத்தும் புதுவருடப் பிறப்பில் தொக்கி நிற்கும் சிறப்புகளை நினைவிலிருத்தி நாம் பெருமையடைய முடியும். வாழ்க்கையென்பது ஒரு அளவைக் கொண்டது. பிறப்பு தொடக்கமென்றால் இறப்பு முடிவாயமைகின்றது. அதே போல் அனைத்துக்கும் ஒரு அளவுண்டு. அந்த வகையிலே தமிழர்கள் உலக இயக்கத்தை, இயற்கையை அளவிட்டு வைத்துள்ளார்கள். அதில் பொதிந்துள்ள உண்மைகள் நவீன விஞ்ஞான ஆய்வுகளையும் விஞ்சியவை.



வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் என்பது போன்று வருடத்தில் முந்நூற்று அறுபத்தைந்தேகால் நாட்களும், வாரமொன்றில் ஏழு நாட்களும் நாளொன்றில் இருபத்துநான்கு மணித்தியாலங்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. அதே போல் ஒரு மணித்தியாலத்தில் அறுபது நிமிடங்களும், ஒரு நிமிடத்தில் அறுபது வினாடிகளும் உள்ளமை பொதுவாக யாவரும் அறிந்ததே.

## தமிழர்களின் பண்டைய காலக்கணிப்பீட்டின்படி புதிய வருடத்தின் ஆரம்பமே சித்திரைப் புத்தாண்டு

நம்மைப் பொறுத்தவரை பொதுவான இக்கணிப்பீடுகளுக்கும் அப்பால் காலக் கணிப்பீடு ஆழமாகவும், விரிந்தும், பரந்தும் உள்ளது. அந்த அளவீட்டின் அடிப்படையில் அமைந்ததே சித்திரைப் புத்தாண்டு தினம்.

இந்துக்கள் தமது ஆறு சமயப் பிரிவுகளில் சூரிய பகவானை முதன்மையாகக் கொண்ட பிரிவாகச் சௌரத்தைக் குறிப்பிடுவர். சிவனை முதன்மையாகக் கொண்டது சைவம். அம்மனை முதன்மையாகக் கொண்டது சாக்தம். பிள்ளையாரை முதன்மையாகக் கொண்டது காணபத்தியம். முருகனை முதன்மையாகக் கொண்டது கௌமாரம். அதேபோல் திருமாலை முதன்மையாகக் கொண்டது வைஷ்ணவம். இந்த வகையிலே சூரியனை முதன்மையாகக் கொண்ட சிறப்புத் தினங்களாகத் தைப்பொங்கல் தினமும், சித்திரைப் புத்தாண்டு தினமும் அமைகின்றன. இயற்கையின் இயக்கம் சூரியனை அடிப்படையாகக் கொண்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. காலநிலை மாற்றங்கள், இயற்கையின் செயற்பாடுகள் அனைத்தும் சூரியனைச் சார்ந்தவையே.



கணிப்பின்படி தமிழ் இந்து வருடங்கள் அறுபது ஆகும். வாரத்தின் முதல் நாள் ஞாயிறாகவும் ஏழாம் நாள் சனியாகவும் அமைவது போன்று நமது அறுபது வருடங்களில் முதலாவது வருடம் 'பிரபவ' என்ற பெயர் கொண்டதாக இருப்பதுடன் அறுபதாவது வருடம் 'அட்சய' என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த அறுபது வருடங்களும் சுழற்சி முறையில் பெயர் பெறுகின்றன. இதன் அடிப்படையில் இந்த சித்திரைப் புத்தாண்டன்று பிறக்கும் வருடம் 'சுபகிருதி' வருடம் என்று

**மனோகரன் ...**

பெயர் பெறுகின்றது.

இந்துக்களின் காலக்கணிப்பீட்டின்படி சித்திரைப் புத்தாண்டு தினமே புதுவருடப் பிறப்பாக ஆண்டின் முதல் மாதமாக அமைகின்றது. நடைமுறையிலுள்ள ஆங்கில நாட்காட்டிகளுக்கு மாற்றமாக குறித்த ஆங்கில மாதத்தின் இடைப்பட்ட மத்திய நாளிலேயே தமிழ், இந்து மாதம் பிறக்கின்றது.

மலரும் 'சுபகிருதி' வருடம் ஆண்டின் சுழற்சியின்படி முப்பத்தாறாவது வருடமாகும். சூரியனின் ராசிகளுக்கிடையேயான பெயர்ச்சியின்படியாக கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்து பஞ்சாங்கத்தின்படி ராசிகள் பன்னிரண்டும், நட்சத்திரங்கள் இருபத்தேழும் இடம்பெறுகின்றன. ராசிகளில் முதலாவதாக மேடமும் பன்னிரண்டாவதாக மீனமும் அமைகின்றன.

அதேபோல் நட்சத்திரங்கள் இருபத்தேழில் அச்சுவினி முதலாவதாகவும் இறுதியானது ரேவதியாகவும் அமைகின்றன.

புதுவருட தினத்தில் மீன ராசியிலிருந்து மேட ராசிக்கு சூரியன் பெயர்ச்சியடைகின்றது. அவ்வாறு பெயர்ச்சியடையும் நாளையே நாம் தமிழ், இந்து புதுவருட தினமாக, வருடத்தின் முதல் நாளாக கொள்கின்றோம், கொண்டாடுகின்றோம். மலரும் புத்தாண்டில் வாழ்வில் வளங்கள் பெருக வேண்டும், நிம்மதி நிலவ வேண்டும். உலகிலே அமைதி நிலவி, நோய்நொடிகளற்ற வாழ்வு மலர்ந்து நிலைபெற வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் நமது பாரம்பரிய சம்பிரதாயங்களை, சடங்குகளைக் கடைப்பிடித்து எதிர்காலத்தை எதிர்கொள்வோம்.

**சுபகிருதி வருட பிறப்பு நாளை**



# தமிழ், சிங்கள பண்டைக்கால இனநல்லுறவின் அடையாளமாகத் திகழும் சித்திரைப் புத்தாண்டு

சித்திரை முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுவதற்குக் காரணம் அன்றுதான் தலை இராசியான மேட இராசி, அசுவனி அல்லது பரணி நட்சத்திரம் முதல்பாகத்தில் உதிக்கிறது.

தமிழர்களது காலக்கணிப்பு முறையின்படி ஒரு ஆண்டுக்குரிய பன்னிரண்டு மாதங்களில் சித்திரை முதலாவது மாதமாகக் இன்று கருதப்படுகிறது.

தமிழ் மாதங்கள் சூரிய மாதங்கள் எனப்படுகின்றன. காரணம் இம்மாதங்கள் பூமிக்குச் சார்பாகத் தோற்றுகின்ற சூரியனுடைய இயக்கத்தை அடிப்படையாக வைத்தே கணிக்கப்படுகின்றன. புவி ஞாயிறை ஒரு முறை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 செக்கன்கள் எடுக்கிறது.

இராசிச் சக்கரத்தில் மேட இராசிக்குள் சூரியன் நுழைவதிலிருந்து அந்த இராசியை விட்டு வெளியேறும் வரையில் உள்ள காலம் சித்திரை மாதமாகும். சூரியன் மேட இராசிக்குள் நுழைவது சித்திரை மாதப் பிறப்பு எனப்படும். சித்திரை முதல் மாதம் என்பதால் இதுவே புதிய ஆண்டின் தொடக்கமும் இளவேனில் காலம் தொடக்கமும் ஆகும்.



சூரியனைச் சுற்றிவரும் பூமி, சூரியன் மற்றும் சந்திரன் இரண்டின் ஈர்ப்புவிசை காரணமாக தளம்பல் ஏற்பட்டு அதன் சுற்றுப் பாதையில் ஓர் ஆண்டில் 50.51 ஆர்க் நொடிகள் பின்னோக்கி நகர்கிறது. மொத்தம் 72 ஆண்டுகளில் 1 பாகை பின்னால் சென்று விடுகிறது. இதனால் இன்று இளவேனில் காலம் புவியின் பின்னோக்கல் காரணமாக மார்ச் 21 இல் தொடங்கிவிடுகிறது. வானியலாளர்களின் கணிப்பின்படி சூரியன் ஏப்ரல் 19 அன்றுதான் மேட இராசிக்குள் நுழைகிறது.



சித்திரை முதல்நாளை சிங்கள மக்களும் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் இந்துக்களின் காலக் கணிப்பே தொடர்ந்து இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது.

இந்து சமய தமிழர்களைப் போலவே பௌத்த சமய சிங்களவர்களும் சித்திரைப் புத்தாண்டன்று அதிகாலையில் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து பௌத்த விகாரைக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் வழக்கத்தில் இருக்கிறது.

இலங்கையில் தமிழ் சிங்கள மக்களால் கொண்டாடப்படும் வைபவமாக புதுவருடப் பிறப்பு இருப்பதால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் முக்கியத்துவம் பெறுகிறது. புதிய எதிர்பார்ப்புகளையும் நம்பிக்கைகளையும் வைத்து மங்களகரமான திருநாளாக சித்திரைப் புதுவருடம் வரவேற்கப்படுகிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே 'இளவேனில்காலம்' என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும் மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும் கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இச்செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம் சமய சமூக கலாசார உறவுகள் பண்பாட்டுக் கோலங்கள் என்பவைகளை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம் நல்லுறவு ஐக்கியம் அன்புப் பரிமாற்றம் குதூகலம் விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப் படும் சமூக விழாவான புது வருடத்தில் இறை வழிபாடு, தானதர்மம் ஆசிபெறுதல் என்பவைகளையும் மக்கள் கடைப்பிடிப்பது வழக்கம்.





சித்திரை முதல் நாளன்று வீட்டை நன்றாக கூட்டி தூய்மை செய்ய வேண்டும். வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்க வேண்டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி சாணத்தால்

## இரு இனங்கள் மத்தியிலும் ஒரேவிதமான கொண்டாட்ட பாரம்பரியங்கள்

மெழுகி அழகிய மாக்கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும்.

அத்தோடு மஞ்சள் குங்குமம் ஆகியவை நோய்க்கிருமிகளும் துஷ்ட தேவதைகளும் வாசல்படியை தாண்டி வராமல் தடுக்கும் சக்திகளாகும். புதுவருட தினத்தில் நம் நலம் காக்கவே இந்நடைமுறை வழக்கத்துக்கு வந்தது.



சிங்கள மக்கள் காலையில் எழுந்து நீராடி புதிய வெள்ளை ஆடை அணிந்து பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபடுவர். கிரிபத் (வெண் பொங்கல்) மற்றும் பிற பலகாரங்கள் செய்து உறவினர் நண்பர்களுடன் பகிர்ந்து உண்டு களிப்பர். பெரியோரை மதித்து கை விசேடம் பெறுவர். சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வர்.

புத்தாண்டு பிறக்கப் போகிறது என்றால் வீடுகளுக்கு வர்ணம் பூசுதல் தமிழர்களின் பழக்கங்களில் ஒன்றாகும். சிங்களவர்களும் அப்படியே. புத்தாண்டுக்கு முதல் நாட்களில் வீட்டை சுத்தம் செய்தல், கழுவுதல் போன்றவைகளும் தமிழர் போன்றே சிங்களவர்களும் செய்கின்றனர்.

புத்தாண்டு பிறப்பிற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே புத்தாண்டு நிகழ்வுகளை பஞ்சாங்க நேரக் கணிப்பீட்டின் படியே தமிழர்கள் செய்வது வழக்கம். சிங்களவர்களும் அப்படியே செய்கின்றார்கள். பஞ்சாங்கம் எனும் சொல் சிங்களவர்களால் 'பஞ்சாங்க' என்று 'ம்' எழுத்தின் ஒலிப்பின்றி பயன்படுத்துகின்றனர். இச்சொல் தமிழரின் வழக்கில் இருந்து சிங்களத்திற்குச் சென்றதாகக் கொள்ளலாம்.

தமிழர்களின் புத்தாண்டில் முதன்மையானவற்றுள் ஒன்றாக இருப்பது இனிப்புப் பட்சணங்களும் வாழைப்பழமும் ஆகும். சிங்களவர்களிடமும் அவைகளே முக்கிய அங்கம் வகிக்கின்றன.

புத்தாண்டிற்கான பலகாரம் மற்றும் தின்பண்டங்கள் பஞ்சாங்கத்தில் கணிக்கப்பட்ட நேரத்திலேயே தயாரிக்க தொடங்க வேண்டும் எனும் ஒரு வழக்கு சிங்களவரிடையே உள்ளது. அதற்கு 'எண்ணெய்ப் பாத்திரம் அடுப்பில் வைக்கும் நேரம்' எனக் கூறப்படுகின்றது. அந்நேரத்திலேயே புத்தாண்டிற்கான தின்பண்டங்கள் தயாரிப்பதற்கு தீ மூட்டி எண்ணெய்ப் பாத்திரங்கள் அடுப்பில் வைக்கப்படுகின்றது.

தெமிழர்களின் புத்தாண்டில் முக்கியமாக பலகாரம் மற்றும் பாசிப்பயறு பலகாரம் இருக்கும். சிங்களவர்களிடமும் அப்படியே. சிங்களவர்கள் தயாரிக்கும் கொண்டைப் பலகாரம் தமிழரின் பழக்கத்தில் இல்லாத ஒன்று.

எவ்வாறாயினும் தமிழ், சிங்கள மக்களிடையே சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஏராளமான ஒற்றுமைகள் உள்ளன. எனவேதான் சித்திரைப் புத்தாண்டை இனநல்லுறவு புத்தாண்டு என்று குறிப்பிடுகின்றனர்.

# அனைவரின் இடர்களையும், துயர்களையும் போக்கும் ஆண்டாக அமைய வேண்டும்



## சித்திரைப் புத்தாண்டு செய்தியில் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கை

பொறுமையும் நம்பிக்கையும் போதுமான அளவு தேவையான பொழுதொன்றில் புலரும் தமிழ், சிங்கள புத்தாண்டு அனைவரின் இடர்களையும், துயர்களையும் போக்குகின்ற ஆண்டாக அமைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்

இவ்வாறு பிறக்கும் தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தேசிய நல்லிணக்கத்தின் பண்டிகையாக தமிழ் சிங்கள மக்களால் கொண்டாடப்படும் சித்திரைப் பண்டிகையின் கொண்டாட்டமானது எதிர்பாராத பொருளாதார நெருக்கடிகளோடும், பொருள் தட்டுப்பாடுகளுடனும் கொண்டாட வேண்டியதொரு சூழலில் எமது நாட்டின் தற்போதைய நிலைமை உள்ளதென்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் சிறப்புச் சொற்பொழிவுகள்


யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் வாராந்த சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 15.04.2022 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து நடைபெறும். சிறப்புச்சொற்பொழிவை சைவசித்தாந்த பண்டிதர் சைவப்புலவர் செ.த.குமரன் 'ஆலய வழிபாட்டு முறைகள்' என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும், மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சிவஸ்ரீபால. திருகுணானந்தக்குருக்கள் (ரொறன்ரோ, கனடா) அவர்களின் அனுசரணையுடன் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சித் தொடர் வரிசையிலே 15 ஆவது சொற்பொழிவு நிகழ்வு நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் எதிர்வரும் 15.04.2022 வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி ஜெ.உதயகலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து 'நாவலரே நமக்கான அடையாளம்' எனுந் தொனிப்பொருளில் இளம்சைவப்புலவர் ச.நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு நடைபெறும். அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# தவக்கால சிந்தனை



## குற்றமுள்ள மனம் குறுகுறுக்கும்

இன்றைய நற்செய்தியானது இயேசுவை யார் காட்டிக் கொடுக்கப் போகின்றாரோ அதனை அவரது வாயாலேயே சொல்ல வைப்பதை தெரிவிக்கின்றது.

நாம் மனது பொருந்தி குற்றம் செய்யும்போது அந்த குற்ற உணர்வு நம் மனதை உறுத்தும். அதனால் நாம் அடைகின்ற பலனும் பயனற்றுப் போகும்.

இன்றைய நற்செய்தி வாசகம் கிறிஸ்தவ வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகும்.

"இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ் ஸ்கரியோத்து தலைமைக் குருவிடம் வந்து இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக் கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள்."

"இயேசு தங்களுக்குப் பணித்தபடியே சீடர்கள் செயற்பட்டு பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மாலை வேளையானதும் இயேசு பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் உண்டு கொண்டிருந்த பொழுது அவர், 'உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்' என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்தமுற்றவர்களாய் ஆண்டவரே அது நானோ?என ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர், என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்'. மானிட மகன் தன்னைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால் ஐயோ அவரைக் காட்டிக்கொடுக்கிறவனுக்குக் கேடு. அம்மனிதன் பிரவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் 'ரபி நானோ? என அவரிடம் கேட்க, இயேசு, 'நீயே சொல்லி விட்டாய்' என்றார்.

குற்றமுள்ள மனம் குறுகுறுப்பதை இங்கே காண முடிகிறது.

பேராசையின் காரணமாக நாமும் பிறரை காட்டிக் கொடுப்பது, உள்ளிட்ட பாவங்களை கட்டிக்கொண்டுள்ளோமா?சிந்திப்போம்.

தவக்காலம் அனைத்திலிருந்தும் நாம் விடுபட வழியமைக்கட்டும்.

எல்.செல்வா...

## ஜனாதிபதி பதவி விலகுவது...

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், நாட்டு மக்கள் இலங்கையரென்ற அடையாளத்துடன் ஒன்றிணைந்து சிறந்த தீர்வுக்காக போராடும்போது 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலை தற்போது காணப்படுகிறது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் இடைக்கால அரசாங்கத்தில் ஒன்றிணைய வேண்டும்.

நாட்டில் நிதி நெருக்கடி தீவிரமடைந்துள்ள பின்னணியில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் சாத்தியம் கிடையாது. சமூக கட்டமைப்பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு குறுகிய காலத்தில் தீர்வு பெற்றுக் கொள்ளாவிடின் அரசியல் செய்வதற்கும் நாடு இருக்காது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகுவது தற்போதைய பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. புதிய பிரதமரின் தலைமைத்துவத்தின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து அதனூடாக குறுகிய கால தீர்வுகாண எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடிக்கு யார் பொறுப்புக்கூற வேண்டும்? என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். பொறுப்புதாரி எங்குள்ளார் என்பது கூட அறிய முடியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை காட்டிலும் பிரச்சினைக்கு தீர்வு காண்பது புத்திசாலித்தனமாக அமையும் என்றார்.

## நம்பிக்கையில்லா பிரேரணைக்கு...

நாணயக்கார தெரிவித்துள்ளார்.நம்பிக்கையில்லாப் பிரேரணை இந்த தருணத்தில் பொருத்தமற்றதென கருதுவதாக தெரிவித்துள்ள அவர், மாறாக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்கான 21ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஜனாதிபதியுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சில யோசனைகளை முன்வைத்துள்ளோம்,தேசிய நிறைவேற்று பேரவையை உருவாக்குதல், கடன்களை செலுத்துவதை பிற்போடுவதற்கான வேண்டுகோளை விடுத்தல், சம்பளம் எதுவும் பெறாத அமைச்சரவையை நியமித்தல், 21 ஆவது திருத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் ஆகிய யோசனைகளை முன்வைத்துள்ளோமென அவர் தெரிவித்துள்ளார்.மக்கள் இந்த யோசனைகளை ஏற்றுக்கொள்வார்கள் இந்த யோசனைகள் நிறைவேற்றப்பட்டால் தங்கள் ஆர்ப்பாட்டங்களை கைவிடுவார்களென கருதுவதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டால் சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பார்களா? என்ற கேள்விக்கு எங்ககளுக்கு எந்த தனிநபர் குறித்தும் பிரச்சினையில்லை அமைப்பு முறை குறித்தே கரிசனையென அவர் தெரிவித்துள்ளார் உத்தேச தேசிய நிறைவேற்று பேரவையினால் நியமிக்கப்படவுள்ள அரசாங்கத்துக்கு வழிவிடுவதற்காக பிரதமரும் பதவி விலகவேண்டுமென வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

## கடனுதவியைத் தொடர்ந்து...

அதேவேளை கடனை மீள செலுத்துவதற்கான கால அவகாசத்தை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும்வகையில்சர்வதேசநாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், சர்வதேச நாணய நிதியத்துடன் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கும் 23 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்வேறு நாடுகளினதும் நிதி அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியிடம் நாம் பல்வேறு தரப்பட்ட நிதியுதவிகளை கோரியுள்ளோம். அதன்படி முதல்கட்டமாக பத்து மில்லியன் டொலரை அவசரத் தேவைக்காக பெற்றுக் கொள்வதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த வாரத்துக்கு நாம் அதனைப் பெற்றுக்கொள்ளவுள்ளோம். அதன் மூலம் நாம் தற்போது நாட்டுக்குத் தேவையான அவசர மருந்துகளைப் பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அதேவேளை விவசாயிகள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் இரசாயன உரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மேலும் 500 மில்லியன் டொலர்களை கோரியுள்ளோம்.

அதேபோன்று வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு சில மாதங்களுக்கு மாதாந்தம் ஒரு தொகை நிதியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் மக்கள் எதிர்நோக்கும் சமையல் எரிவாயு பிரச்சினை மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பிலும் கவனம் செலுத்தி வருகின்றோம்.

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர்,

பிரச்சினைகள் கிடையாதெனக் கூறி நாம் மக்களை ஏமாற்ற மாட்டோம். தற்போதைய நெருக்கடிகளுக்கு நிவர்த்தி காண்பதற்காக இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்களை தொடர்வதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்துள்ளோம். அந்த நிதியை நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்த உள்ளோமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ)

## வளமான எதிர்காலத்துக்கு...

அவர் வெ ளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யுகத்தில் மாபெரும் கலாசார நிகழ்வாக கருதப்படும் தமிழ், சிங்கள புத்தாண்டு அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சுபீட்சமான புத்தாண்டாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூரிய பகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு செல்வதே சிங்கள, தமிழ் புத்தாண்டு பிறப்பாக கருதப்படுகிறது. சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களின் பாரம்பரிய சூரிய நாட்காட்டியின் முதல் நாள் உதயமாகுவது ஏப்ரல் மாதத்திலாகும். இரு வேறு மதங்களை உருவாக்கிக் கொண்ட இரு இனத்தவர்கள் ஒன்றோடு ஒன்றாக கொண்டாடும் அபூர்வமான கொண்டாட்டமாக சிங்கள, தமிழ் புத்தாண்டை அடையாளப்படுத்த முடியும்.

இந்நாட்டு மக்கள் சித்தரை மாதத்தை சுபீட்சமான மாதமாக கருதுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்கள் நீண்டகாலமாக வெகு விமர்சையாக சிங்கள, தமிழ் புத்தாண்டை கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும், கடந்த இரு வருடங்களுக்கு முன்பிருந்து, எங்கள் நாட்டில் தமிழ், சிங்கள புத்தாண்டு பிறந்தது பூமியின் குரலில் அல்ல. மாறாக, கொரோனாவிலிருந்து பாதுகாப்பாக இருங்கள் என்ற அறிவுறுத்தல்களின் குரலிலேயே பிறந்தது.செழிப்பு நிறைந்த பாடத்தை கற்றுத்தரும் சிறப்பான புத்தாண்டு, இம்முறை, எங்கள் குடிமக்களை சுத்தமான உணவை சமைக்கும் தயக்கத்துக்குள் தள்ளிவிட்டே பிறந்துள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மிக ஆபத்தான நிலைக்கு முழு நாடு தள்ளப்பட்டுள்ள நிலையில், எங்களுடைய மக்களின் சாதாரண வாழ்க்கைத்தரம் அசாதாரண முறையில் சவாலுக்குள்ளாகியுள்ளது.

தன்னிறைவுப் பொருளாதாரம் நிறைந்த நாடாக இருந்த எங்கள் நாடு, இன்று கண்ணீர் சிந்தும் தேசமாக மாறியுள்ளதுடன், முழு குடும்பமும் மகிழ்ச்சியாக, அமைதியாக மற்றும் நிம்மதியாகவும் புத்தாண்டை கொண்டாடும் வாய்ப்பும் இழக்கப்பட்டுள்ளது.ஒருபுறம் மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் அலைக்கழிக்கப்படுவதுடன், மறுபக்கத்தில் இந்நாட்டு இளைய தலைமுறையினர் வீதிக்கு இறங்கி அரசாங்கத்துக்கு எதிராக தங்களுடைய எதிர்ப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அண்மைகால வரலாற்றில் நாடாக நாம் எதிர்கொள்ளும் மிக மோசமான சூழ்நிலையின் விளிம்பிற்கு நாம் வந்துள்ளதுடன், நல்லதொரு எதிர்கால தலைமுறையினரின் கனவை நனவாக்கும் நோக்கில் எங்கள் நாட்டு மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர். காலத்துக்கு காலம் பரிணமித்த மனித நாகரீகம், கலாசாரம் என்பன மனிதனை முழுமைப்படுத்தியுள்ளதுடன், அவர்களின் தேசியத்திற்கு உரித்தான கலாசார கொண்டாட்டங்களின் ஊடாக, அவர்களை நேர்மையான பாதையில் அழைத்துச் செல்கிறது. சிங்கள, தமிழ் புத்தாண்டும் இவ்வாறான பெறுமதியான விழுமியங்கள் நிறைந்த நிகழ்வாக திகழ்கிறது.

மகத்தான தியாகங்களை செய்த மக்களை மீண்டும் மீண்டும் தியாகம் செய்ய கூறுவதை விட, நடைமுறையில் ஆட்சியாளர்கள் அந்த செயற்பாட்டை முன்னெடுப்பது மிக அவசியமானது என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இந்த நெருக்கடியான சூழல் முடிவுற்று, வளமான அமைதியான, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாளைய நாள் பிறந்து, கனவுகள் நனவாக பிரார்த்திக்கின்றேன் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பெற்றோல் தாராளமாக...

குற்றமாகுமென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.

தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் கொள்முதல் செய்வதை தவிர்க்கும் வகையில் நேற்று முதல் எதிர்வரும் இரு நாட்களுக்கு பிளாஸ்டிக் கேன் மற்றும் பீப்பாய்களுக்கு எரிபொருள் விநியோகிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் மற்றும் கைத்தொழில்சாலை உரிமையாளர்கள் உரிய ஆவணப்படுத்தலுடன் எரிபொருளை பெற்றுக்கொள்ளலாமெனவும் குறிப்பிட்டார்.

இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அலுவலகத்தில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எ ரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட நெருக்கடி நிலைமைக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது. எரிபொருளுக்கான வரிசை தற்போது குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. கடந்த மூன்று மாதகாலத்தில் மாத்திரம் வழமைக்கு மாறாக முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு நாட்களில் மாத்திரம் 35 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளது. சாதாரன நாட்களில் 5,500 மெற்றிக்தொன் டீசல் விநியோகிக்கபடும் ஆனால் தற்போது நாளாந்தம் 7,500 மெற்றிக்தொனை விடவும் அதிகளவில் டீசல் விநியோகிக்கப்படுகிறது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வரிசையில் நிற்பவர்களில் பெரும்பாலானோர் பிளாஸ்டிக் கேன்கள்,பீப்பாய்கள் ஆகியவற்றில் எரிபொருளை நிரப்பிக்கொள்வதற்கு காத்திருக்கின்றனர்.

எரிபொருள் விநியோகத்தில் சிக்கல் நிலைமை தீவிரமடைந்ததை தொடர்ந்து சட்டவிரோதமான முறையில் எரிபொருள் விற்பனை பெரும்பாலான பகுதியில் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

சட்டவிரோதமான முறையில் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் குற்றமாகும்.நேற்று முன்தினம் 10 ஆயிரம் லீற்றர் டீசல் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இனி சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படும் ஆகவே தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் கொள்வனவு செய்வதை பொது மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மின் விநியோக தடை அமுல்படுத்தாத காரணத்தினாலும்,தேவைக்கு மேலதிகமாக எரிபொருள் பெற்றுக்கொள்வதை தடுப்பதற்காகவும் நேற்று முதல் எதிர்வரும் இரு நாட்களுக்கு கேன்கள் மற்றும் பீப்பாய் ஆகியவற்றில் எரிபொருள் நிரப்புவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில்களில்ஈடுப்படுபவர்கள்உரிய ஆவணப்படுத்தலுடன் பீப்பாய்கள் மற்றும் கேன்களில் எரிபொருளை பெற்றுக்கொள்ளலாம். எரிபொருள் விநியோக நடவடிக்கை பிரதேச சபை ஊடாக கண்காணிக்கப்படுகிறது. பெற்றோல் விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

தேவையான அளவு பெற்றோல் கையிருப்பிலுள்ளது. வழமையான நாட்களை காட்டிலும் தற்போது நாளாந்தம் 7,000 ஆயிரத்திற்கும் அதிகமான மெற்றிக்தொன் பெற்றோல் விநியோகிக்கப்படுகிறது.

எரிபொருள் விலையேற்றம் குறித்து கவனம் செலுத்தப்படவில்லை. தற்போதைய விலைக்கமைய ஒரு லீற்றர் டீசல் விநியோகத்தில் 110 ரூபா நட்டத்தையும், ஒரு லீற்றர் பெற்றோல் விநியோகத்தில் 52 ரூபா நட்டத்தையும் எதிர்க்கொள்கிறோம்.

தற்போதைய விலைக்கமைய கூட்டுத்தாபனம் நாளாந்தம் 800 மில்லியன் தொடக்கம் 1000 மில்லியன் நட்டத்தை எதிர்க்கொள்கிறது என்றார்.

## நெருக்கடி சூழல் கடந்து...

வாழ்த்துகளை பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

துன்பத்தை வென்று மகிழ்ச்சியையடையும் எதிர்பார்ப்பை குறிக்கும் தமிழ்சிங்கள புத்தாண்டானது நம் அனைவரதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று சமூககலாசார மதிப்புகளை ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு கடத்தும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் தமிழ் சிங்கள ஆதிக்குடிகளின் தொன்மைவாய்ந்த மரபுகளை நினைவுபடுத்துகிறது.

இந்தச் சவால் மிகுந்த காலகட்டத்தில் எதிர்பாராத விதமாக நாம் அனைவரும் முகம் கொடுத்த, கொடுத்து வரும் துன்பங்களை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்பதற்கு தேவையான எதிர்கால திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே செயற்படுத்தி வருகின்றது.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இப்புத்தாண்டு அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமைய பிரார்த்தித்து வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி இராஜினாமா...

தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இத்தகைய நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்பதையும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

இடைக்கால அமைச்சரவையொன்றை அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கும் வகையில் அமைப்பது தொடர்பில் மேற்படி சுயாதீன குழு ஆராய்ந்து வருவதாகவும் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ)

## இராஜாங்க அமைச்சராக ...

மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழிநுட்பம், கமத்தொழில் இராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

அவர் (11) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் இச்சந்தர்ப்பத்தில் இணைந்துகொண்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன, பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக சமர்ப்பித்த கடிதத்தை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

அதன்படி, பியங்கர ஜயரத்ன தொடர்ந்தும் இராஜாங்க அமைச்சுப் பதவியில் செயற்படுவார்.

## அத்தியாவசிய மருந்து...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எதிர்வரும் இரண்டு வாரக்காலப்பகுதிக்குள் சமையல் எரிவாயு, மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலரை விடுவிப்பதற்கு உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 21 மில். மக்களின் நாட்டை...

காணப்படாத நாட்டை உருவாக்குவது குறித்தே எதிர்பார்ப்பை கொண்டுள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.இலங்கை மக்களின் முதுகில் ஊழலுக்கும் குடும்ப வம்சங்களை கட்டியெழுப்புவதற்கும் இடமில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

## போராட்டங்களை...

சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வரமாட்டார்கள். இதனால், வருமான இழப்பு ஏற்படும்.

எனவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அதனைக் கைவிட்டால், சுற்றுலாப் பயணிகள் வருவதன் மூலம், நாட்டுக்கு வருமான அதிகரிப்பு ஏற்படுமென முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சி செய்தாலும் அல்லது எதிர்க்கட்சி ஆட்சி அமைத்தாலும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்திடம் உதவிகளைப் பெற இருக்கின்ற சந்தர்ப்பத்தில், இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை குறித்து சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தும் என்றும் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்...

அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களுள் 196 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் 81 சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், 493 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 14,15,16 ஆம் திகதிகளில்...

வெளிவரமாட்டாது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமை போன்று தினகரன் வாரமஞ்சரி வெளிவரும் என்பதையும் வாசகர்களுக்கு அறியத் தருகின்நோம்

## எமது நாட்டுக்காக எத்தகைய...

தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர், அமைச்சர் அலி சப்ரியுடன் பேசினேன்.

சில ஆலோசனைகளை வழங்கினேன். எமக்கு அசை'சு பதவி முக்கியமில்லை. மத்திய வங்கி ஆளுநருடனும் பேசினேன்.இன்னும் தாமதிக்க முடியாது. பொருளாதாரத்தை அஜித் நிவாட் கப்ரால் நாசமாக்கினார்.

நிலைமையை உணர்ந்து ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்றார்.

இன்று, நாளை, நாளை மறுதினம்

# நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாது

- பொது பயன்பாடுகள் ஆணைக்குழு



புத்தாண்டை முன்னிட்டு இன்று 13, நாளை14 மற்றும் நாளை மறுதினம் 15 ஆம் திகதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்பட மாட்டாதென இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் காலை 08.00மணி தொடக்கம் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் 02 மணி நேரம் 15 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நிபந்தனையின்றி ஆதரவளிக்க முன்வரின்

# தமிழ் மக்களை வீதியில் இறக்கி போராடுவோம்

சிவாஜிலிங்கம் கடும் எச்சரிக்கை

யாழ். விசேட நிருபர்



நிறைவேற்று அதிகார முறை ஒழிப்போ, நம்பிக்கையில்லா பிரேரணையோ எதுவாக இருந்தாலும் தமிழ்த் தரப்புக்கள் நிபந்தனையின்றி ஆதரவளித்தால் பொதுமக்களை வீதிகளில் இறங்குவோமென வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் திங்களன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தி இறங்கியிருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணியும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிலையில் தமிழ்த் தேசிய பிரதான மூன்று அணிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஆட்சிமுறையை ஒழிப்பது சம்பந்தமாக கூட்ட அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆட்சி மாற்றம் கொண்டு வந்து என்ன செய்யப் போகின்றோம்? ஆட்சி மாறினாலும், காட்சி மாறவில்லை. எதுவும் மாறப்போவதில்லை.

வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்க வேண்டும். சாதாரண பெரும்பான்மை மூலம் மாகாண சபை சட்டத்தின்படி அருகருகே இருக்கக்கூடிய இரண்டு மாகாணங்கள் இணைக்கப்பட முடியுமென்று கூறப்படுகின்றது. பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் கூட இதனை நிறைவேற்ற முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இல்லாமல் எந்தவித பொருளாதாரத்துக்கும் தீர்வும் கிடையாது. அத்துடன் நிரந்தர சமாதானமும் நல்லிணக்கமோ கிடையாது என்பதை தெட்டத் தெளிவாக உணர வேண்டும். ஆறு கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி அதன் பின்னர் நீ யாரோ நான் யாரோ என்ற நிலை தான்.

நிறைவேற்று அதிகார முறை ஒழிப்போ நம்பிக்கையில்லா பிரேரணையோ எதுவாக இருந்தாலும் தமிழ் தரப்புக்கள் நிபந்தனையின்றி ஆதரவளித்தால் பொதுமக்களை கொண்டு வீதிகளில் இறங்குவோமென்றார்.

21 ஆவது திருத்தத்தினூடாக

# அதிகாரத்தை குறைக்க ஜனாதிபதி தயார்

புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தனது அதிகாரங்கள் குறைக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தயாராக உள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவந்து ஜனாதிபதியின அதிகாரங்களைக் குறைப்பதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது என ஜனாதிபதி மிகத் தெளிவாகத் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். ஆனால் அரசியலமைப்பை திருத்தாது அவ்வாறு செய்ய முடியாது என்று தெரிவித்த அவர், ஜனாதிபதியை இராஜினாமா செய்யுமாறு கோரி மக்கள் போராட்டம் நடத்திய போதிலும், சட்டம் மற்றும் அரசியலமைப்புக்கு அமையவே பாராளுமன்றம் செயற்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். எனவே சகல தரப்பினரையும் இணைத்து இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கான கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அமைக்கப்படவுள்ள புதிய இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஊழல் அமைச்சர்கள் அமருவதை நாடு விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (பா)

## ஒற்றுமை, புரிந்துணர்வுடன்...

01ஆம் பக்கத் தொடர்

ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ், சிங்கள புத்தாண்டுப் பிறப்பை புதிய எதிர்பார்ப்புகளுடன் வரவேற்பது பழங்காலத்திலிருந்தே இடம்பெறும் நமது பாரம்பரியமாகும். இந்த ஆண்டும் அந்த எதிர்பார்ப்புகளுடனும், புதிய நம்பிக்கைகளுடனும் புத்தாண்டுப் பிறப்பைக் கொண்டாடுகிறோம்.

புத்தாண்டின் உண்மையான உரிமை நமது குழந்தைகளுக்கே உண்டு. குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தின் மகிழ்ச்சியைப் பாதுகாத்துக் கொடுப்பதில் நீங்கள் அதிக அக்கறை செலுத்துகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதேபோன்று, புத்தாண்டு கொண்டாட்டங்களை அனுபவிப்பதற்காக தமது பிள்ளைகளுடன் இணைவதற்கான வாய்ப்பை இழந்து, விசேட கடமைகளில் ஈடுபட்டு இருப்பவர்களைப் போன்று, வெளிநாடுகளிலிருக்கும் அனைவரினதும் அர்ப்பணிப்பை நினைவுகூருகிறேன்.

மலர்ந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, நிலவுகின்ற சவால்களை வெற்றிகொள்ளும் சுபீட்சம் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன் என்றும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மின்சார சபைக்கு பாவனையாளர்கள்

# செலுத்த வேண்டிய தொகை 48 பில். ரூபாவாக அதிகரிப்பு

பயன்படுத்திய மின்சாரத்திற்காக பாவனையாளர்கள் செலுத்த வேண்டிய கட்டண தொகை 48 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக மின்சார சபை ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கான கொடுப்பனவுகளை செலுத்துவதில் பாரிய நெருக்கடி உருவெடுத்துள்ளதாக பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்தார். தனியார் மின் உற்பத்தியாளர்களுக்கு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

நிதி நெருக்கடி காரணமாக இம்மாத சம்பளம் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், மின்சார சபை செயற்பாடுகளுக்காக 25 பில்லியன் ரூபா வங்கிக் கடனாகப் பெற வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் 45 பில்லியன் ரூபா நிலுவைத் தொகையாக இருந்ததோடு அது தற்பொழுது 48 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை கூறுகிறது.

பொதுமக்கள் தங்களின் நிலுவைத் தொகையை அடுத்த சில நாட்களில் தாமதமின்றி வழங்குமாறு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தவணை அடிப்படையில் அவற்றை செலுத்தவும் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நிலையில் நாடு முடக்கப்பட்ட போது மின்கட்டணத்தை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டது தொடக்கம் நிலுவை தொகை அதிகரித்து வருவதாக அறிய வருகிறது. (பா)

# நீராடச் சென்றவரை இழுத்துச் சென்ற முதலை

03 பிள்ளைகளில் ஒருவர் பலி

கல்கிரியாகம மானேருவ பகுதியில் வாவியில் நீராடச்சென்ற மூன்று பிள்ளைகளில் ஒருவரை முதலையொன்று இழுத்துச் சென்றுள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

மானேரவநேகம்பான பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய ஒருவரையே இவ்வாறு முதலை இழுத்துச் சென்றுள்ளது. காணாமல் போனவரை தேடும் பணியில் கடற்படையினரும் பொலிஸாரும் இணைந்து ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வயோதிப தம்பதி குத்திக் கொலை

இரத்தினபுரியில் சம்பவம்

இரத்தினபுரி கொடகேவெல பல்லேபெத்த பகுதியில் வயோதிப தம்பதியினர் கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 82 வயதான கணவரும், 75 வயது மனைவியுமே தமது வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், இந்த கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# ரம்பொடையில் நீரில் மூழ்கி மூவர் மாயம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொத்மலை ரம்பொட நீர்வீழ்ச்சி பகுதியில் நேற்று நீராடச் சென்றுள்ள மூன்று பேர் நீரில் அள்ளுண்டு சென்றுள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற ஏழு பேரில் மூன்று பேர் காணாமல் போயுள்ள நிலையில் அவர்களைத் தேடும் பணிகளில் பொலிசாரும் பொதுமக்களும் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து ரம்பொடைக்கு வருகை தந்த ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் ஏழு பேர் இவ்வாறு குளிக்கச் சென்றுள்ளதுடன் அவர்களில் மூவரே நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ரம்பொட பிரதேசத்தின் மேல் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக கீழ்நோக்கி பெருக்கெடுத்த வெள்ளத்திலேயே அவர்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் பெய்து வரும் கடும் மழைக்கு மத்தியிலும் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ)

# இடைக்கால அரசாங்கம் இப்போது சாத்தியமற்றது

அதனாலேயே பதவியேற்றேன் - சாந்த பண்டார



தனிப்பட்ட அபிலாசைகளுக்கன்றி நாட்டை ஸ்திரப்படுத்தும் நோக்கிலேயே அமைச்சுப் பொறுப்பை ஏற்றதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் நாடு அராஜக நிலைக்கு தள்ள முற்படும்சார்பானவர்களுடன் நிற்க முடியாதென்றும் அதனால் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். சேதனப் பசளை உற்பத்தி, மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்தல், நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழிநுட்பம், கமத்தொழில் இராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அவர் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அவர், மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். நாடு அராஜக நிலைக்கு தள்ளப்படுவதை தடுப்பதற்காக அரசை ஏற்குமாறு எதிரணிக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். சு.கவும் சுயாதீனமாக செயற்படும் குழுக்களும் இடைக்கால அரசொன்றை உருவாக்க முயன்றாலும் அது சாத்தியமாகவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும் அரசை ஏற்க மறுத்தது. இந்த நிலையில் தான் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்காக அர்ப்பணிக்க முடிவு செய்தேன்.எனது முடிவு சரியானது என்பதை சில மாதம் கடந்த பின்னர் மக்கள் அங்கீகரிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், சாந்த பண்டார இராஜாங்க அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்தமை, கட்சி கொள்கையை காட்டிக் கொடுக்கும் செயலென =லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்பட்ட சாந்த பண்டாரவை கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குவதற்கும் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக =லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (பா)

இனிய தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்கள்!



ஹரே கிருஷ்ணா ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயம்

மஹா கும்பாபிஷேகம்

01st September 2022

ஆலயத் திருப்பணியில் பங்கெடுத்து பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் பரிபூரண அருளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

ஆலய அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது வங்கி வைப்பினூடாகவோ நன்கொடைகளை வழங்கலாம்

- BANK - HATTON NATIONAL BANK
- BRANCH - JAMPETTAH STREET
- ACCOUNT NAME - ISKCON
- ACCOUNT NO - 207010000891

- BANK - COMMERCIAL BANK
- BRANCH - KOTAHENA
- ACCOUNT NAME - ISKCON
- ACCOUNT NO - 1050669901

தொடர்புகளுக்கு – ISKCON
No. 188, New Chetty Street, Colombo 13
0112433325/0772288166/iskcon@slt.lk

திகதி 11.04.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4734
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,126,500.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,138,762.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 0 2 0 1 7 2

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 764
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,140,300.00
வெற்றி இலக்கினம் J வெற்றி இலக்கங்கள் 21 32 55 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,319,132.80

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0043
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,557,920.00
இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 13 29 31 39
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,698,221.60

கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1082
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,534,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 247,039,958.00
N 23 04 36 64 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீர பிரார்த்திப்போம்

வடகொழும்பு அமைப்பாளர் ராம் வாழ்த்து



பிறக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீரும் ஆண்டாக அமைய வேண்டும் என பிரார்த்தித்து வரவேற்போம் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான சீ.வை.பி ராம் தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறக்கும் புத்தாண்டில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் கஷ்டங்கள் தீரும் ஆண்டாக அமைய வேண்டும் என நாங்கள் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். புத்தாண்டை சந்தோசமாக கொண்டாட முடியாமல் எத்தனையோ பேர் வீடுகளில் முடங்கி இருக்கின்றனர். இவர்களை இனம் கண்டு அவர்களும் புத்தாண்டை சந்தோசமாக கொண்டாட முடியுமான உதவிகளை செய்யவேண்டும்.

# இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை மீட்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஓ. பன்னீர் செல்வம் வலியுறுத்தல்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை தாய்நாட்டிற்கு அழைத்து வரவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்கவும், தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அதிமுக ஒருங்கிணைபாளர் ஓ.பன்னீர் செல்வம் வலியுறுத்தி உள்ளார். இதுதொடர்பாக அதிமுக ஒருங்கிணைபாளர் ஓ.பன்னீர் செல்வம் தனது டுவிட்டரில், “பொதுவாக நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அந்த நீதி விரைந்து கிடைக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலும் தான் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஆனால், நீதிமன்றங்களே அநீதியான தீர்ப்பை வழங்கும் நடைமுறை இலங்கை நாட்டில் இருப்பது மிகுந்த அதிர்ச்சியை அளிப்பதாக உள்ளது.

இலங்கைக்கு பல உதவிகளை செய்துகொண்டிருக்கும் நாடு இந்தியா. இப்படிப்பட்ட உதவி செய்கின்ற நட்பு நாடான இந்திய மீனவர்களிடம் ஒரு கோடி ரூபாய் கட்டணம் செலுத்த சொல்வதும், அவர்களை துன்புறுத்துவதும், சிறைபிடிப்பதும் அவர்களது படகுகளை பறிமுதல் செய்து ஏலத்தில் விடுவதும் செய்நன்றி மறத்தலாகும்.

சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க ரூ.1 கோடி செலுத்த வேண்டும் என்று கூறியுள்ள இலங்கை நீதிமன்றத்துக்கு கண்டனம் தெரிவித்து கொள்கிறேன். இலங்கை சிறையிலுள்ள தமிழக மீனவர்களை தாய்நாட்டிற்கு அழைத்து வரவும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்கவும், தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்” என்று அதில் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.







வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மஞ்ச உற்சவம் நேற்றுமுன்தினம் (11) மாலை மிகவும் சிறப்புற இடம்பெற்றது.

# வன்முறை கும்பலால் முச்சக்கர வண்டி தீக்கிரை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் நவாலி பகுதியில் முச்சக்கர வண்டி ஒன்று வன்முறை கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நவாலி, ஆனந்தா வீதி பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பல் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியை அடித்து நொறுக்கிவிட்டு அதற்கு தீ வைத்த பின்னர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சாவகச்சேரி ச.தொ.ச வில் குழப்பநிலை

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி ச.தொ.ச விற்பனை நிலையத்தில் பொங்கல் பொதி நிறைவடைந்ததால் அதனை பெற்றுக்கொள்ள வந்தவர்கள் நேற்று சதொச பணியாளர்களுடன் முரண்பட்டுள்ளனர். இதனால் அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

சாவகச்சேரி சதொச விற்பனை நிலையத்திற்கு புதுவருட தினத்தை முன்னிட்டு வந்த பொங்கல் பொதி நிறைவடைந்தமையால் அதன் பின்னர் பொதியை பெற்றுக்கொள்ள வந்தவர்கள் சாவகச்சேரி சதொச முகாமையாளர் மற்றும் பணியாளர்களுடன் முரண்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக சதொச முகாமையாளர் கருத்து தெரிவிக்கையில்;

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பொருட்கள் வழங்கப்படுகின்றன.சாவகச்சேரி கிளைக்கு 216 பொங்கல் பொதியே வழங்கப்பட்டிருந்தன.

அது கடந்த 10ஆம் திகதி நிறைவடைந்து விட்டது. இருப்பினும் 100 பேருக்கு பொங்கல் பொதி பெற வரிசையில் கொட்டும் மழைக்கு மத்தியில் நின்றிருந்தனர். அதனால் அவர்களுக்கு டோக்கன் வழங்கி எதிர்வரும் 13ஆம் தேதி பொங்கல் பொதி வாங்க வருமாறு தெரிவித்தோம். இருப்பினும் நேற்று டோக்கன் பெறாத பலரும் வந்திருந்தமையால் குழப்ப நிலை ஏற்பட்டிருந்தது. பொங்கல் பொதி டோக்கன் வழங்கப்பட்டவர்களுக்கு இன்று வழங்கி வைக்கப்படும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.



புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள HIRDARAMANI ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களினால் இரத்ததான நிகழ்வொன்று நேற்று(12) முன்னெடுக்கப்பட்டது

## கிளிநொச்சி மாவட்டம்

# வனவள, வனஜீவராசிகள் திணைக்களங்களின் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை

**(பரந்தன் குறூப் நிருபர்)**



கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் ஆறாயிரத்து ஆயிரத்து 246 ஏக்கர் வரையான காணிகள் வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்கள் என்பவற்றிலிருந்து விடுவிக்க வேண்டிய தேவை காணப்படுவதாக மாவட்டச் செயலக தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் பொது மக்களின் பயன்பாட்டிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் உள்ள காணிகள் மற்றும் மேற்படி திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. சுமார் ஆறாயிரத்து 246 ஏக்கர் வரையான காணிகள் வனவள திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றில் இருந்து விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக மாவட்டச் செயலக தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. காணிகளை விடுவிப்பது தொடர்பில் பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி மாதம் 07ஆம் திகதி மாவட்ட உயர் அதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்கள அதிகாரிகளால் கள விஜயம் மேற்கொள்ளப்பட்டு அடையாளப்படுத்தப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் இரண்டாயிரத்தி 395 ஏக்கர் வரையான 16 காணிகளும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 608 ஏக்கர் வரையான ஆறு துண்டுகளும் பூநகரி பிரதேச செயலக பிரிவில் 1410 ஏக்கர் வரையான எட்டு காணித் துண்டுகளும் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

கண்டாவளைப்பிரதேச செயலக பிரிவில் 513 ஏக்கர் வரையான நான்கு காணித் துண்டுகளும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து ஆயிரத்து 320 ஏக்கர் 02 ரூட் 33 பேர்ச் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக மாவட்டச் செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணிகளை விடுவிப்பது தொடர்பாக பரிசீலனை செய்வதற்கு ஏதுவாக பொருத்தமான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு வனவளத் திணைக்களத்தினால் கோரப்பட்டதற்கு அமைவாக கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி மாவட்ட செயலகத்தினால் 12 கோவைகள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பதவி விலக மாட்டார்

## த.தே.கூட்டமைப்பாக எடுக்கும் முடிவே பலமாகவிருக்கும்

**யாழ்.விசேட நிருபர்**

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை பொறுத்தமட்டில் நாங்கள் தனியாக முடிவு எடுப்பதை காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரு முடிவு எடுத்தால் தான் அது பலமாக இருக்கும் என புளொட் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழில். நேற்றுமுன்தினம் கட்சியின் மத்திய குழு கூட்டத்தினை நடாத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,



நாங்கள் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களாக முடிவு எடுக்கும் போது அது பலமாக இருக்கும். எந்தவிதமான பிரேரணை கொண்டு வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

மூன்று கட்சியும் இணைந்து தீர்மானம் எடுக்க முடியாவிட்டால் நாங்கள் தனியாக தீர்மானிக்க முடியும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களை மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி பாதித்துள்ளது. ஆகவே பொருளாதார பின்னடைவு நிச்சயமாக நீண்ட காலமாக இருந்து வந்த ஒன்று. இந்த நாட்டிலே யுத்தத்திற்காக பெருந்தொகையான பணம் செலவழிக்கப்பட்டது. அதற்காக கடன்கள் பெறப்பட்டன. பாரியளவில் அழிவுகள் ஏற்பட்டன. இவை எல்லாம் சேர்ந்தே பொருளாதார பின்னடைவு ஆரம்பிக்க காரணமாகவுள்ளது.

போராட்டத்துக்கு ஜனாதிபதி சரியான பதில் ஒன்றை வழங்க வேண்டும்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கூறியே மக்கள் போராடுகிறார்கள்.

அதனை ஜனாதிபதி செய்ய மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# காணாமல் போன கடற்படை சிப்பாய் சடலமாக மீட்பு

**யாழ்.விசேட நிருபர்**

சந்தேகத்திற்கு இடமான படகுகளை துரத்திய இலங்கை கடற்படை படகுகள் இரண்டு மோதி விபத்துக்கு உள்ளானதில் , கடற்படை சிப்பாய் ஒருவர் காணாமல் போன நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை காரைநகர் கடற்பரப்பில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெடுந்தீவுக்கு தொலைவில் , இந்தியா பக்கமாக இருந்து வந்த சந்தேகத்திற்கு இடமான இரண்டு படகுகளை கடற்படையினர் மறிக்க முற்பட்ட போது, குறித்த படகுகள் கடற்படையின் கட்டளையை மீறி தப்பி சென்றுள்ளது.

அதனை அடுத்து கடற்படை படகுகள் அவர்களை விரட்டிய போது, கடற்படைக்கு சொந்தமான இரண்டு படகுகள் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன. அதன் போது படகில் இருந்த நான்கு கடற்படையினர் கடலில் தவறி விழுந்தனர். இதில் மூவர் ஏனைய கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனவரை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வந்தனர். இந் நிலையில் காரைநகர் கடற்பரப்பில் காணாமல் போன கடற்படை வீரர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேவேளை மீட்கப்பட்ட மூன்று கடற்படையினரில் இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் ஊர்காவற்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



மன்னார் வெள்ளிமலை மன்/பதியுதீன் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் முஹம்மத் ஜலீஸ் ஜஸ்மிர் அஹமட் என்ற மாணவன் 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். சித்தியடைந்த மாணவனையும் பாடசாலை அதிபர் எம்.கே. றயிசுந்தீனையும் படத்தில் காணலாம்.




மாங்குளம் பாலைமரத்தடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் இரதோற்சவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். படங்கள் மாங்குளம் நிருபர்

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்




## தமிழர்களுக்குரிய புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழா

சித்திரைப் புத்தாண்டை தமிழ்ப் புத்தாண்டு என்றும் கூறுவர். அதாவது தமிழர்களுக்குரிய புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழா இதுவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை சித்திரைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

இலங்கையில் இதனை தமிழ் சிங்களப் புத்தாண்டு என்றும் குறிப்பிடுவர். ஏனெனில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமான பொதுப்பண்டிகையாக இப்புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப் பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றி வருவதற்கு 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 செக்கன்கள் ஆகின்றது. இதுவே



தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.

சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு

**மலைபடுகடாம் 'தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை' என்றும், பழமொழி நானூறு 'கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்' என்றும் பாடுவதால் இளவேனில் தொடக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது**

பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

ஆங்கில கிரெகொரிய நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 ஆம் திகதி தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 ஆம் திகதிகளில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதேயாகும்.

நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக்காலம் கணிக்கப்படுகிறது.

தமிழரிடையே சித்திரைப் புத்தாண்டு என்ற பண்டிகை எப்போதிருந்து வழக்கில் இருந்ததென்பதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை. ஆனால் இப்புத்தாண்டு மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது.

தமிழ் நாட்காட்டியானது இராசிச் சக்கரத்தை காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேழத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சங்க இலக்கியமான நெடுநல்வாடையில் மேழமே முதல் இராசி என்ற குறிப்பு காணப்படுவதால், அதை மேலதிக சான்றாகக் கொள்வர். எனினும், பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய அகத்தியர் பன்னீராயிரம், பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புட்ப விதி முதலான நூல்கள் தெளிவாக சித்திரை முதல் மாதம் என்று சொல்கின்றன.

பங்குனியின் இறுதி நாட்களில் அல்லது சித்திரை முதல் நாளில் தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். மலைபடுகடாம் 'தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை' என்றும், பழமொழி நானூறு 'கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்' என்றும் பாடுவதால் இளவேனில் தொடக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சித்திரை ஒன்றையே முதன்மையான புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். இலங்கை தம்பதெனியா இராச்சிய மன்னன் பராக்கிரமபாகுவின் அரசகுருவான தேனுவரைப்பெருமாள் எழுதிய 'சரசோதி மாலை' எனும் நூலில் வருடப்பிறப்பின் போது செய்ய வேண்டிய சடங்குகள் விபரிக்கப்பட்டுள்ளன. மேலும், திருக்கோணேஸ்வரம், 1622 ஆம் ஆண்டு சித்திரை மாதம், தமிழர் புத்தாண்டு அன்று கொள்ளையிடப்பட்டதாக போர்த்துக்கேயர் பற்றிய குறிப்புகள் சொல்கின்றன.



சித்திரைப் புத்தாண்டில் பரிமாறப்படும் மரபார்ந்த சிற்றுண்டிகள் சிறப்பு வாய்ந்தவையாகும். இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பல ஒற்றுமையான அம்சங்கள் உள்ளன. புத்தாண்டுப் பட்சணங்களிலும் ஒற்றுமை உள்ளது.

## 1622 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் பற்றிய குறிப்பில் சித்திரைப் புத்தாண்டு பற்றிய குறிப்புகள்

புத்தாண்டுக்கு முந்திய நாட்களை வீடு வாசலை சுத்தம் செய்வதிலும், லங்கரிப்பதிலும் தமிழர் செலவழிப்பர். மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கலப் பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டறையில் வைத்து, அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் அந்தப் பாரம்பரியம் பெரும்பாலும் வழக்கொழிந்து விட்டதென்றே கூற வேண்டும். புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் நீராடி கோலமிட்டு, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும். வாழ்க்கை என்றாலே கசப்பும் இனிப்பும் கலந்தது தான். இப்புத்தாண்டிலும் கசப்பும் இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.

புத்தாண்டு பிறக்கும் விசு புண்ணிய காலத்தில், ஆலயத்தில் வழங்கப்படும் 'மருத்து நீர்' எனப்படும் மூலிகைக் கலவையை இளையவர்களின் தலையில் மூத்தோர் வைத்து ஆசீர்வதிப்பர். அதன் பின்னர் நீராடி பெரியவர்களிடம் ஆசி பெற்று, குறித்த சுபவேளைகளில் கைவிசேடம் அல்லது 'கைமுழுத்தம்' பெறுவர்.

மூத்தவர்களால் இளையவர்களுக்கு, புத்தாண்டு அன்பளிப்பாக வழங்கப்படும் பணமே 'கைவிசேடம்' எனப்படுகிறது. போர்த்தேங்காய் உடைத்தல், வழுக்கு மரம் ஏறல், யானைக்குக் கண் வைத்தல், கிளித்தட்டு, ஊஞ்சலாடல், முட்டி உடைத்தல், வசந்தனாட்டம், மகிடிக்கூத்து, நாட்டுக்கூத்து முதலானவை இலங்கையின் பாரம்பரிய புத்தாண்டுக் கலையாடல்கள் ஆகும்.





## தமிழ், சிங்கள மக்களின் முதன்மையான பொதுப்பண்டிகை சித்திரைப் புத்தாண்டு

இலங்கைத் திருநாட்டில் இரு மதத்தினருக்கு மட்டுமல்ல, இரு இனத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாக சிறப்பித்துச் சொல்லப்படும் வகையில் சித்திரைப் புதுவருடம் அமைந்துள்ளது. இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்கள் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

வேறுபட்ட மதங்களையும் மொழிகளையும் கொண்டுள்ள மக்கள் இணைந்து பண்டிகையொன்றை பெருவிழாவாகக் கொண்டாடுவது உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில், இரு மதம் இரு மொழி சார்ந்த வகையில் சித்திரைப் புதுவருடம் இருப்பதால் இலங்கையில் இது ஒரு தேசியப் பொருவிழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது.

சித்திரைப் புதுவருடப் பிறப்பின் போது தமிழ், சிங்கள மக்கள் வெவ்வேறு பாரம்பரிய சமய அனுட்டான முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். புதுவருடப் பிறப்பன்று விஷு புண்ணிய காலத்தில் தலைக்கு மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது இந்து மக்களது வழக்கம் என்பதுடன் அதுவே புதுவருடத்தில் முதற்கருமமாகவும் அமைகிறது.

புதுவருடம் பிறந்ததும் சுபநேரத்தில் தலைக்கு எண்ணெய் வைத்து ஆசி பெறுவது பௌத்த மக்களது பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதுடன் அதுவே அவர்களது புதுவருடத்தில் ஆரம்பக் கருமமாகவும் இருக்கிறது.

இந்து மக்கள் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல அனைவராலும் தவறாது பின்பற்றப்படவும் வேண்டியதுமாகும்.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னரும், வருடப் பிறப்புக்கு முன்னருமான விஷு புண்ணிய காலத்தில் கிழக்கு அல்லது வடக்கு திசையை பார்க்கும் வகையில் நின்றவாறு தலைக்கு மருத்து நீர் தேய்த்த பின்னர் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவாறு தலையிலும் காலின் அடியிலும் குறிப்பிட்ட இலைகளை வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.



ரிஷிகள், முனிவர்கள் மற்றும் சித்தர்களால் அறிமுகம் செய்யப்பட்ட மூலிகை மருத்துவமுறைகளுடன் தொடர்புள்ளதான இலைகளையும் மற்றும் திரவியங்களையும் சேர்த்து காய்ச்சிப் பெறும் இந்த மருத்துநீரானது மருத்துவக்குணம் கொண்டிருக்கிறது.

எனவே இதனை தலையிலும் உடலிலும் தேய்ப்பதால் தோலிலும் உடலின் உள்ளேயும் இருக்கும் வியாதிகள் நீங்கப் பெறுவதுடன், வாழ்வில் பீடித்துள்ள தோஷங்களும், கர்மவினைகளும் தெய்வீக ரீதியில் அகன்று விமோசனம் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக ஆலயங்களில்தான் மருத்துநீர் காய்ச்சப்படுவதால் ஒருவகையில் இது தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்நானம் செய்த பின்னர், அனைவரும் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறான நிறத்திலான புதிய வஸ்திரங்களை அணிந்து, முதலில் வீட்டுப் பூஜை அறையிலும் பின்னர் ஆலயங்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

தாய் தந்தையர், குரு, பெரியோர்கள் முதலானவர்களை வணங்கி அவர்களது ஆசியைப் பெறுவதும், ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு பணம் அல்லது பொருட்களை வழங்கி தானதருமங்களை செய்வதும், குறிக்கப்பட்ட சுபநேரத்தில் கைவிசேடம் பரிமாறிக் கொள்வதும், உறவினர்கள் நண்பர்களது வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதும், விருந்துபகாரங்களில் கலந்து கொள்வதும், சுபதினம் மற்றும் சுபநேரம் பார்த்து புதுக்கருமங்களை தொடங்குவதும் புதுவருடப் பிறப்பின் பின்னரான சிறப்புச் செயற்பாடுகளாகும்.

**தாய் தந்தையர், குரு, பெரியோர் முதலானவர்களை வணங்கி அவர்களது ஆசி பெறுவது, ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு தானதருமங்கள் செய்வது, சுபநேரத்தில் கைவிசேடம் பரிமாறுதல், உறவினர்கள் நண்பர்களது வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்தல், விருந்துபகாரங்களில் கலந்து கொள்வது, சுபதினம் மற்றும் சுபநேரம் பார்த்து புதுக்கருமங்களை தொடங்குதல் போன்றன புதுவருடப் பிறப்பின் பின்னரான சிறப்புகளாகும்**



சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டத்தின் போது தமிழ், சிங்கள மக்கள் தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். தமிழ் மக்களது கொண்டாட்ட செயற்பாடுகள் கூட இடத்துக்கிடம் மாறுபடுகிறது. அதாவது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நிகழ்வுகளும் கொண்டாட்ட நடைமுறைகளும் வேறுபட்டு இருப்பதையும் காண முடிகிறது.



இந்த வகையில் வடபகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டை நோக்கினால், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் நகரப் பகுதிகளில் சித்திரைப் புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகளும் சம்பிரதாய நடைமுறைகளும் ஒரே மாதிரியானதாகவே அமைந்திருக்கின்றன.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சித்திரைப் புதுவருடத்தையொட்டிய தமிழ் மக்களது பாரம்பரிய நடைமுறைகளுள் ஒன்றாக குறிப்பாக யாழ்குடாநாட்டு மக்களிடையே நிலவும் வழக்கமாக போர்த்தேங்காய் அடித்தல் விளையாட்டு பெரும்பாலும் கோயில் வீதிகளில் நடைபெறுவதுண்டு. சித்திரைப் புதுவருடப் பிறப்புக்கு பல நாட்களுக்கு முன்பதாகவே போர்த் தேங்காய்களை சேகரிக்கும் முயற்சி தொடங்கி விடும். தேங்காய்களை சிதறடிப்பதற்காக பயன்படுத்தப்படும் காய் 'கையான்' என்று சொல்லப்படும்.


இந்த விளையாட்டிலே கைதேர்ந்தவர்களை 'அடிகாரர்கள்' என்று சொல்வார்கள். இரு பக்கத்து அடிகாரர்களும் எதிரெதிரே இருந்து கொள்வர். ஒருவர் உருட்டிவிடும் தேய்காயை மற்றவர் தன்னுடைய கையில் வைத்திருக்கும் கையானால் அடித்து நொருக்குவார். இப்போது இந்த விளையாட்டு வெகுவாகக் குறைந்து விட்ட போதிலும் யாழ் குடாநாட்டின் சில கிராமங்களிலும் நடைபெற்று வருவதை காணக் கூடியதாக இருக்கிறது."

இவ்வாறு பேராசிரியர் சண்முகதாஸ் எழுதியிருக்கிறார்.

யாழ்குடாநாட்டில் இன்னொரு பாரம்பரிய போட்டி நிகழ்வாக கோழிச்சண்டை அமைந்திருக்கிறது. சண்டை செய்வதற்கென்றே சேவல்கள் வளர்க்கப்பட்டு வந்தன. யாழ்குடாநாட்டு கிராமங்களில் ஏற்கனவே ஒருகாலத்தில் இந்த விளையாட்டு பாரம்பரியம் பெற்றுத் திகழ்ந்தது.

இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். சித்திரைப் புதுவருடத்தின் போது கிளித்தட்டு, சடுகுடு, கோலாட்டம் போன்ற விளையாட்டுகளை ஏற்பாடு செய்து நடத்துவதுடன் ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுக்களும் அக்காலத்தில் இடம்பெறுவதுண்டு. அத்துடன் மாட்டுவண்டிச் சவாரி, துவிச்சக்கரவண்டி ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற போராட்டங்களும் புதுவருட சிறப்பு நிகழ்வுகளாக நடைபெற்று வருகின்றன. பழையனவற்றையெல்லாம் மறந்து விட்டு புதிய எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் வைத்து வரவேற்கப்படும் சித்திரைப் புதுவருடமானது ஒவ்வொருவருக்கும் வாழ்வில் வசந்தம் வீசும் வகையில் நல்ல எதிர்காலத்தை தோற்றுவிப்பதாக அமைய இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

யாழ்மைந்தன்...



# சித்திரைப் புத்தாண்டு
## சிறப்பு மலர்

# சுபகிருது புதிய வருடம் சுபிட்சத்தை அனைவருக்கும் அள்ளி வழங்கட்டும்!

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு இனத்தினருக்கும் மதத்தினருக்கும் உரிய சிறப்புத் தினங்கள், விழாக்கள், பண்டிகைகள் என்பன வந்து கொண்டேயிருக்கின்றன. அந்த வகையில் இலங்கையிலுள்ள அனைத்து மதத்தினருக்கும் உரிய விழாக்களால் இவ்வாரம் சிறப்புப் பெறுகிறது.

நமது நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இந்து மதத்தையும், ஏனையோர் கிறிஸ்தவ மதத்தையும் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதுபோலவே சிங்கள மக்களுள் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தையும், மறுபகுதியினர் கிறிஸ்தவ மதத்தையும் சார்ந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில், தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உரிய ஒரு திருநாளாக சித்திரை வருடப் பிறப்பு அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம். எனவேதான் இதனை தமிழ், சிங்களப் புத்தாண்டு என்று கூறுகின்றார்கள். இந்து மதத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும், பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்கள மக்களுமே சித்திரைப் புத்தாண்டை கொண்டாடி வருகிறார்கள். இதனால் இது ஒரு தேசியப் பெருவிழாவாகவும் சிறப்புப் பெறுகிறது.

இலங்கையில் இவ்வாரம் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மக்களுக்குரிய சிறப்புத் தினங்கள் வருவதால் இவற்றுடன் இணைந்த வகையில் தமிழ், சிங்களப் புத்தாண்டு உதயமாகிறது. நாளை 14ஆம் திகதி மலரும் புத்தாண்டுக்கு மறுநாள் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிறிஸ்தவ மக்களுக்குரிய புனித வெள்ளி என்று சொல்லப்படும் பெரிய வெள்ளிக்கிழமையாகும். தொடர்ந்து வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று உயிர்த்த ஞாயிறு பெருவிழாவாகும்.

வெள்ளிக்கிழமை என்பது இந்து மக்களுக்குரிய சிறப்பு வழிபாட்டு நாளாகும். இவ்வாரத்தில் 16ஆம் திகதி சனிக்கிழமை சித்திரைச் சித்திரை எனப்படும் இந்து மக்களுக்குரிய சித்திரா பூரணை விரதநாளாகும். இதேதினம் பௌத்த சிங்கள மக்களுக்கும் நோன்மதி தினமாக வழிபாட்டுக்குரிய நாளாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.





சூரியபகவானின் இராசி மண்டல சஞ்சாரத்திற்கு அமையவே ஒவ்வொரு தமிழ் மாதமும் பிறக்கிறது. அதாவது, முதலாவதான மேட இராசியில் சூரிய பகவான் பிரவேசம் செய்யும் போது, முதலாவது தமிழ் மாதமான சித்திரை உதயமாகிறது. அதுவே புத்தாண்டுப் பிறப்பு நாளாகவும், சூரிய பகவானின் மேட இராசிப் பிரவேச நேரமே புத்தாண்டுப் பிறப்பு நேரமாகவும் அமைகிறது.



புத்தாண்டு பிறக்கும் நேரத்திற்கு முன்னதாகவுள்ள நான்கு மணித்தியாலம் தொடக்கம், புத்தாண்டு பிறப்புக்கு பின்னரான நான்கு மணித்தியாலம் வரை (மொத்தமாக எட்டு மணித்தியாலம்) விஷு புண்ணிய காலம் என்று சொல்லப்படுகிறது. இந்த புண்ணியகாலத்தில் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து, பஞ்சாங்கங்களில் குறிக்கப்பட்டிருக்கும் நிறத்திலான புத்தாடை அணிந்து ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வது அவசியமாகும் என நம் முன்னோர்களால் சொல்லப்பட்டுள்ளது.



தைப்பொங்கல் திருநாளைப் போன்று, சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பு நாளிலும் தங்கள் வீட்டு முற்றத்தில் சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதையும் சில இந்து மக்கள் மேற்கொண்டு வருகிறார்கள். மலரும் புதிய வருடம் வாழ்வில் மகிழ்ச்சிகரமாகவும் மங்களகரமாகவும் அமைய வேண்டும் என்பதை எதிர்பார்ப்பாகக் கொண்டு கண்கண்ட தெய்வமாகிய சூரிய பகவானை இந்நாளில் போற்றித் துதிக்கிறார்கள். சித்திரை மாதம் இளவேனில் எனப்படும் வசந்தகாலத்தின் தொடக்கமாதலால், சித்திரைப் புத்தாண்டு தனித்துவம் பெறுவதாக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் வரலாற்றுப் பாரம்பரிய சிறப்புமிக்க வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஏனைய பகுதிகளிலும் இறைவழிபாட்டுடன் கலை, கலாசார நிகழ்ச்சிகளுடன் புத்தாண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இடத்துக்கு இடம் அந்தந்தப் பிரதேச பண்பாட்டு மரபுகளுக்கு அமைய வைபவ நிகழ்வுகள் வெவ்வேறாக இருப்பதையும் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

குறிப்பாக இலங்கையின் வடபகுதிக் கிராமங்களில் கடந்த காலத்தில் போர்த் தேங்காய் அடித்தல் முக்கிய நிகழ்வாக இடம் பெற்று வந்தது. இதுதவிர, மாட்டுவண்டிச் சவாரி, மரதன் ஓட்டப் போட்டி, துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி போன்றவைகளையும் ஏற்பாடு செய்து நடத்துவார்கள். இவற்றுடன் ஊஞ்சலாட்டம், பால்முட்டி அடித்தல், சடுகுடு ஆடுதல், கும்மியடித்தல் முதலானவையும் நடைபெறுவதுண்டு. இலங்கையின் ஏனைய தமிழ்ப்பகுதிகளிலும் இதுபோன்ற விளையாட்டுகளை புத்தாண்டின்போது ஏற்பாடு செய்து நடத்துவார்கள். தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டுச் சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையிலேயே இத்தகைய பண்டிகைகால விளையாட்டு நிகழ்வுகள் அமைந்திருந்தன.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் சித்திரைப் புத்தாண்டையொட்டி நடைபெற்றுவந்த மாபெரும் இசை நிகழ்ச்சி, அந்நாளில் மக்களின் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. கொழும்பிலிருந்து வருகை தரும் தமிழ், சிங்கள கலைஞர்களுடன் உள்ளூர் கலைஞர்களும் இணைந்து இசைவிருந்தை வழங்குவார்கள். அதனை இலங்கை வானொலியின் பிரபல அறிவிப்பாளர்கள் தொகுத்து வழங்குவதும் வழக்கம். நினைவலைகளிலிருந்து நீக்கப்பட முடியாத நிகழ்வுகள் இவையாகும்.

இம்முறை உதயமாகும் சித்திரைப் புத்தாண்டு அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் 36ஆவது வருடமாக, 'சுபகிருது' என்ற பெயரில் அமைந்திருக்கிறது. நாளை பிறக்கவிருக்கும் புத்தாண்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் சுபிட்சத்தை வழங்க வேண்டுமென அனைவரும் பிரார்த்திப்போம்.

**அ. கனகசூரியர்...**

---





# சுபகிருது புதுவருடம் அனைவருக்கும் சுபிட்சத்தை அள்ளி வழங்கட்டும்!

உலகில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் சூரிய பகவான். நவக்கிரக நாயகர்களுள் முதல்வராகப் போற்றித் துதிக்கப்படும் இவர், உலகின் சகல இயக்கத்திற்கும் காரணமாக இருக்கிறார்.


சித்திரைப் புதுவருடம் ஆங்கில புத்தாண்டைப் போல குறிப்பிட்ட ஒரு நேரத்திற்கு பிறப்பதில்லை. சூரிய பகவானின் இராசி மண்டல சஞ்சாரத்திற்கு அமையவே புதுவருடம் உதயமாகிறது. அதாவது, பன்னிரு இராசிகளுள் முதலாவதான மேடம் இராசிக்குள் சூரியன் பிரவேசம் செய்யும் போது, பன்னிரு மாதங்களுள் முதலாவதான சித்திரை மாதம் பிறக்கிறது.

பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிரக சஞ்சார நேரங்களுக்கு அமைய, சூரிய பகவானின் மேடம் இராசிப் பிரவேசமே சித்திரை மாதப் பிறப்பாகவும், தமிழ்ப் புதுவருடப் பிறப்பாகவும், மேடம் இராசிப் பிரவேச நேரமே புதுவருடப் பிறப்பு நேரமாகவும் அமைகிறது.

**2022 சுப கிருது வருடம் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

சுபகிருது வருஷம் (2022) வாக்கிய பஞ்சாங்கக் கணிப்பின்படி சித்திரை 1ஆம் திகதி நாளை (14.04.2022) வியாழக்கிழமை காலை 7.50 மணியளவில் பிறக்கிறது.

திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழக்கிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது. வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம் இவ்வாறு இருத்தல் நல்லது. அதாவது நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடையின் நிறம் மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம் ஆகும்.



**மேட இராசிக்குள் சூரியன் பிரவேசம் செய்யும் போது, பன்னிரு மாதங்களுள் முதலாவதான சித்திரை பிறக்கிறது**

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஆபரணம் பவளம்,புஷ்பராகம் கொண்ட ஆபரணம்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம் புஷ்பராகம் கொண்ட ஆபரணம்.

**தோஷ நட்சத்திரம்:**

பரணி, மகம், பூரம் ,உத்தரம் 1ஆம் பாதம் ,பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம்,திருவோணம்,அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்



**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுபநேரம்:**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழக்கிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை.

சித்திரை 2 ஆம் திகதி (15. 04.2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை.சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை.

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்:**

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழக்கிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை.

சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலம்:**

14.04.2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு_ புண்ணிய காலம்:**

14.04.2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

**மருத்து நீர்:**

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு_ புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடப்பம் இலையும், காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு_ புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.மருத்து நீர் தயாரித்தல் பற்றிய விபரம் இங்கு தரப்படுகின்றது.

தாழம்பூ, தாமரைப்பூ,மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம்,அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு ஆகியவற்றை சுத்த நீரிலிட்டு காயச்சிக் கொள்ள வேண்டும்.

**சுபகிருது வருஷ பலன்:**

சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ்
அபமாம் விலைகுறையு மான்சாம் சுபமாகு
நாடெங்கு மாரிமிகு நல்வினை வுண்டாகுங்
கேடெங்கு மில்லையிதிற் கேள்

இந்த சுபகிருது எனும் வருஷத்தில் பூமியானது பல்வேறு விதமான விழாக்களால் பிரகாசிக்கும். அரசர்களும் கள்வர்களிடமிருந்து ( மக்களுக்கு) அபயமளிப்பவர்களாகவும் சண்டையில் உற்சாகமுடையவர்களாகவும் இருப்பார்கள்.

**வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்:**

சித்திரை 28 ஆம் திகதி (11.05.2022) புதன்கிழமை காலை 6.10 முதல் 7.20 வரையிலான நேரம் அல்லது சித்திரை 30 ஆம் திகதி (13.05.2022) வெள்ளிக்கிழமை காலை 6.03 முதல் காலை 8.03 வரையிலான நேரம்.



**திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்:**

சித்திரை 08 ஆம் திகதி (21.04.2022) வியாழக்கிழமை பகல் 10.00 முதல் 11.35 வரையிலான நேரம் அல்லது சித்திரை 21 ஆம் திகதி (04.05.2022) புதன்கிழமை காலை 7.35 முதல் காலை 8.30 வரையிலான நேரம் அல்லது சித்திரை 30 ஆம் திகதி 13.05.2022 வெள்ளிக்கிழமை காலை 8.16 முதல் காலை 10.04 வரையிலான இடைப்பட்ட நேரம்.

மக்கள் புதிய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும், நம்பிக்கைகளை செயற்படுத்துவதற்கும் சித்திரைப் புதுவருடத்தின் வரவைக் காத்திருப்பது வழக்கம். மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்த பின், பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறத்திலான ஆடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்வதுடன் புதுவருடக் கருமங்கள் ஆரம்பமாகின்றன. சுபதினம், சுபநேரம் என்பன புதுவருடக் கருமங்களின் போது முக்கிய இடத்தை வகிக்கின்றன. கைவிசேடம் வழங்குதல், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டு விருந்துபசாரங்களில் கலந்து கொள்ளுதல், குரு மற்றும் பெரியோர்களை தரிசனம் செய்து ஆசி பெற்றுக் கொள்ளுதல், தானதருமங்கள் செய்தல் போன்றவை பாரம்பரிய நடைமுறைகளாகும்.

இம்முறை உதயமாகும் சித்திரைப் புதுவருடத்தின் பெயர் 'சுபகிருது' என்பதாகும். அறுபது தமிழ் வருடங்களின் சுற்றுவட்டத் தொடரில் இது 36 ஆவது வருடமாகும்.

புதுவருடம் பிறந்தால் கைவிசேடம் பரிமாறிக் கொள்வது பாரம்பரிய வழக்கமாகும். குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்து அல்லது மூத்தோர்களிடமிருந்தும், நிறுவனங்களில் பணிபுரிவோர் தங்களது வேலை கொள்வோரிடமிருந்தும் கைவிசேடம் பெற்றுக் கொள்வார்கள்.

**மனோ...**




# பட்டாசு உற்பத்தியில் வீழ்ச்சி

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள், டொலர் பிரச்சினை காரணமாக பட்டாசு சார்ந்த உற்பத்தி கைத்தொழில் பாரியளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக பட்டாசு உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் புத்தாண்டு காலத்தில் மக்கள் அதிகம் பயன்படுத்தும் பட்டாசுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கண்டி மாவட்ட பட்டாசு உற்பத்தியாளர்கள் பெரும் இன்னல்களை சந்தித்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.



இது தொடர்பில் கருத்து தெரிவித்த பட்டாசு உற்பத்தியாளர்கள், 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுத் தாக்குதலையடுத்து மிகவும் மோசமான முறையில் பட்டாசு சார்ந்த உற்பத்திகளின் சந்தை பாதிக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு கொவிட் தொற்று மற்றும் தற்போது முகம் கொடுக்கும் டொலர் பிரச்சினை காரணமாக பட்டாசு உற்பத்தி பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பட்டாசு தயாரிப்புக்காக பயன்படுத்தப்படும் இரசாயன மூலப்பொருட்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது. இன்னும் சில பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



தெல்தோட்டை அல்ஹிக்மா ஆரம்ப பிரிவு பாடசாலையில் 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், பொறுப்பாசிரிகளையும் படத்தில் காணலாம்.

## புத்தாண்டு காலத்தில் விசேட போக்குவரத்து சேவை

<u>இரத்தினபுரி சுழற்சி நிருபர்</u>

புத்தாண்டு காலத்தில் பலாங்கொட இ.போ.ச டிப்போவினால் தடையின்றி போக்குவரத்துச் சேவைகள் இடம் பெறும் எனவும் இதற்கு அவசியமான டீசல் கையிருப்பில் இருப்பதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பலாங்கொடை டிப்போவின் முகாமையாளர் தர்மசிரி ஹரிஸ் சந்திர நேற்று தெரிவித்தார்.

பலாங்கொடை ஐக்கிய வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட வர்த்தக விளம்பர ஒலி பரப்புச் சேவையின் மூலம் பிரதேச மக்களுக்கு இதுதொடர்பில் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

பலாங்கொடை டிப்போவினால் உள்ளூர் பிரதேசம் மற்றும் தூரப் பிரதேசங்களுக்கு நடத்தப்பட்டு வந்த போக்குவரத்து சேவைகளை மேலும் விஸ்தரிக்கவும் போக்குவரத்தை மேம்படுத்த செய்யவும் போதுமான டீசல் கைவசம் இருப்பதனால் பொது மக்களுக்கு அவசியமான சேவைகளை வழங்க தமது ஊழியர்கள் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

# நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைக்க சதித்திட்டம்

<u>தலவாக்கலை குறூப் நிருபர்</u>

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கு சதித்திட்டமொன்று மேற்கொள்ளப்படுவதாகவும் இது மாவட்டத்திற்கு இழைக்கப்படும் அநீதி எனவும் இலங்கைதொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா கூட்டுறவு சுற்றுலா விடுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இதனை தெரிவித்தார்.அவர் இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவிக்கையில்



நடந்து முடிந்த பொது தேர்தலில் நுவரெலியா மாவட்டத்திற்கு 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன்பின் கடந்த வருடம் ஒரு உறுப்பினர் நுவரெலியா மாவட்டத்தில் குறைக்கப்பட்டு பதுளை மாவட்டத்தில் அதிகரிக்கப்பட்டது.

தற்போது இன்னுமொரு உறுப்பினரை நுவரெலியா மாவட்டத்திலிருந்து குறைத்து காலி மாவட்டத்தில் அதிகரிக்க போவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே நுவரெலியா மாநகரசபை எல்லைக்குள் இருந்த நுவரெலியா லவர்சிலிப் தோட்டத்தில் ஒரு பகுதியை நுவரெலியா பிரதேசத்திற்குள் பிரித்து விட்டனர். இதனால் நுவரெலியா மாநகரசபைக்கு ஒரு தமிழ் உறுப்பினர் தெரிவாகும் நிலை இல்லாமல் போனது.

இதுபோன்று நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறு இரண்டு உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டால் எமது தமிழ் பிரதிநிதித்துவம் குறைவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். ஒரு சில கிராம உத்தியோகத்தர்கள் வெளி மாவட்டத்திலும் வெளிநாடுகளிலும் தொழில் செய்பவர்களை இங்கு வாக்காளர்களாக பதிவு செய்வதற்கு மறுத்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இன்று அதிகாரமுள்ள மலையக அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு வாக்காளர்களை பதிவு செய்வதற்கும் நுவரெலியா மாவட்டத்தில் உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பதற்குமான முயற்சியை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மரக்கறி வியாபாரிகளை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

<u>தலவாக்கலை குறூப் நிருபர்</u>



நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்துக் கொள்ள முடியாமல் விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராஜாராம் கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு வியாபாரி நாள் ஒன்றுக்கு 3000 கிலோ முதல் 5000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு விற்பனை செய்து வந்த நிலையில் நேற்று 200 கிலோ மரக்கறிகளை கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். டீசல் தட்டுபாட்டால் வெளி மாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவது மிகவும் குறைந்துள்ளது.

இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அவஸ்தைபடுகின்றனர்.

அத்தோடு மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர்.




சென்கூம்ஸ் தோட்டத்தில் இளைஞர், யுவதிகள், சிறுவர்கள் இணைந்து அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு,விலை அதிகரிப்பை போன்றவற்றை சுட்டிக்காட்டி நேற்றுமுன்தினம் (11) திங்கட்கிழமை பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சென்கூம்ஸ் தோட்ட காரியாலயத்திற்கு அருகாமையில் ஆரம்பமான பேரணி மட்டுக்கலை சந்தி வரை ஊர்வலமாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். படம்: தலவாக்கலை குறூப் நிருபர்



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மாத்தளை மணிக்கூட்டு கோபுர சந்தியில் புதிய ஜனநாயக மாக்சிச லெனிச கட்சியினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது உக்குவளை பிரதேச சபை உறுப்பினர் சுரேன் கலந்துகொண்டார். 'உழைக்கும் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து', 'உழைக்கும் தொழிலாளர்களின் வடியும் கண்ணீருக்கு நிரந்தர பதில் சொல்', போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். படம்: உக்குவளை விஷேட நிருபர்



மாத்தளை வட்டகொட பிரதான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாரிய கல்லொன்று பாதையை நோக்கி புரண்டமையால் அப்பகுதியில் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. இப்பகுதியினை பார்வையிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினரும் மாத்தளை அபிவிருத்தி இணைப்புக்குழுவின் தலைவருமான நாலக்க கோட்டகொட உட்பட அனர்த்த முகாமைத்துவ பணிமனை அதிகாரிகள் நேரில் சென்றிருந்த போது எடுக்கப்பட்ட படம். படம்: உக்குவளை விஷேட நிருபர்

# புத்தாண்டு வாழ்த்து

## பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நிம்மதியான வாழ்வைத் தொடர வேண்டும்

**இ.தொ.கா பொதுச்செயலாளர், பா.உ. ஜீவன் தொண்டமான்**



மலர்ந்திருக்கும் சுபகிருது சித்திரைப் புத்தாண்டு மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மகிழ்வை மதிப்பையும் பெற்றுத்தர இறைவனை பிரார்த்திக்கின்றோம். இந்த ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம் என இ.தொ.கா பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெருந்தோட்ட மக்கள் ஏனையோரைப் போல சகல சலுகைகளையும் உரிமைகளையும் பெற்று வாழவேண்டுமென்பதே எமது அபிலாஷைகளாகும். நிரந்தரமான குடியிருப்புக்கள், ஏனைய வசதிகள் ஆகியவற்றை இவர்களும் பெற்று நிம்மதியான வாழ்வைத் தொடர வேண்டும் என்பதற்காகவே எமது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ச்சியாக பாடுபட்டு வருகின்றது.

உறுதியும் கட்டுப்பாடும் உள்ள சமூகமாக மலையக மக்கள் திகழும் போது அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் நாம் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம்.

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்

**இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்**



அரசியல் தலைவர்கள், சமய தலைவர்கள் மற்றும் மக்கள் ஆகிய நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அனைவருக்கும் இனிய தமிழ், சிங்கள புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு புதிய வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில் இவ்வருடமானது மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் கொண்டு வருகிற ஆண்டாக அமைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிராத்திகின்றேன்.

கடந்த வருடத்தில் நாம் கற்றுக் கொண்ட சாதக, பாதக விடயங்களை இந்த ஆண்டின் படிப்பினைகளாக கொண்டு எமது வாழ்வினை வளப்படுத்திக்கொள்வோமாக.

மேலும் சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வு இந்த புதிய வருடத்தில் கிடைத்திட வேண்டும் என நான் பிரார்த்தனை செய்கிறேன்.

நீதி மற்றும் சமத்துவம் என்பவற்றின் அடிப்படையில் பிரிக்க முடியாத பிளவுப்படாத ஒருமித்த நாட்டுக்குள் ஒற்றுமையாகவும், நல்லிணக்கத்துடனும் இருந்திட இப்புத்தாண்டிலிருந்து அரசியல் தலைவர்கள், சமய தலைவர்கள் மற்றும் மக்கள் ஆகிய நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம். அனைவருக்கும் இனிய தமிழ், சிங்கள புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் தொலைநோக்கு சிந்தனையோடு செயற்படவேண்டும்

<u>தலவாக்கலை குறூப் நிருபர்</u>



பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழிசமைக்கட்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலினால் எமது நாட்டு மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இது நிரந்தரமான ஒன்றல்ல. நிச்சயமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலை நலமாக அமையும் என்ற திடமான நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது. மிகவிரைவில் எமது நாடு சுபிட்சம் பெறும். நாம் என்னதான் புறக்கணிக்கப்பட்டாலும் ஒதுக்கப்பட்டாலும் கூட தமது தெய்வ நம்பிக்கை, விருந்தோம்பல், தொழில் கடமைகள் இவை எதிலுமே நாம் புறக்கணிக்கப்படவில்லை. எமது இருப்பை தக்கவைத்து கொள்ள வேண்டும். அதற்கு நாங்கள் தொலைநோக்கு சிந்தனையோடு செயற்படவேண்டும்.

எனவே எல்லாம் வல்ல இறைவன் எமது மக்களுக்கு வழங்கியுள்ள திடமான மனநிலையும் கிடைத்ததை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும் பண்பும் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமெனவும் எதிர்வரும் காலங்களை நாமே சிறப்பாக்கிக் கொள்ளும் மன உறுதியை எமது மக்கள் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன் என தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடிகள் நீங்கி ஆரோக்கியமான சூழல் உருவாக வேண்டும்



தமிழ் மக்கள் வாழ்வில் முன்னேற்றகரமான மாற்றங்களுக்கு இப்புத்தாண்டு வழிவகுக்க வேண்டுமென்று, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இவ்வாழ்த்துச் செய்தியில், இப்புத்தாண்டு தமிழர்களுக்குரியதாக இருந்த போதிலும், சிங்கள பௌத்த மக்கள் ஆரம்பம் காலம் முதல் புத்தாண்டுப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். அந்தவகையில் தமிழ், சிங்கள மக்கள் அனைவருமே, இப்புத்தாண்டினை அனுஷ்டிக்கின்றனர். இவ்விரு இனமக்களும் ஐக்கியம், ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றுடன் வளமாக வாழ்ந்து, இந்நாட்டினை கட்டியெழுப்பும் வகையில், செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளும் முற்றாக நீங்கி, எம்மக்களின் வாழ்வியலில் ஆரோக்கியமானதோர் சூழல் உருவாக வேண்டும். என எல்லாம் வல்ல இறைவனை, குடும்பத்தினருடன், சமூகத்தினருடன் இணைந்து பிராத்திப்போம்.

# முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின்

# 40 வருட ஊழிய நிறைவு நிகழ்வும், 29ஆவது மாநாடும் போதகருக்கான சிறப்பு பட்டமளிப்பு விழாவும்

மிஸ்பா மிஷனரி ஊழியத்தின் 40 ஆவது அகவை நிறைவு நிகழ்வும் 29 ஆவது தேசிய ஊழிய மாநாடும் இன்றும் 14, 15, 16.17 ஆம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதன் முதல் நிகழ்வாக தேவநற்செய்தி ஊழியத்தின் நிறுவனர் போதகர் சாரங்கபாணியின் புதல்வர் பிளசிங் சாரங்கபாணி கல்வியை பூர்த்தி செய்தமையையிட்டு போதகர் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரடு முரடான பாதைகள் வழியே, எதிர்ப்புகள், சவால்களுக்கு மத்தியில் மிஸ்பா ஊழியத்தைக் கட்டி எழுப்பி இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமது பணியை பொறுமையுடன் கூடிய அர்ப்பணிப்பினை வழங்கி வந்துள்ளார். பாவத்திலிருந்து விடுதலை, மனம் திரும்புதல், நீடித்த சமாதானத்துக்காக விசுவாசத்துடன் கூடிய ஜெபம் மூலம் நொறுங்குண்ட நெஞ்சங்கள் பலவற்றுக்கு ஆறுதலையும் தேற்றலையும் பெற்றுத்தர பாலமாய் விளங்குகிறார். தேவசித்தத்தின் படி இதய சுத்தியுடன் மனுக்குல சமாதானத்துக்கான நமது முழுநேர பணியை மேற்கொண்டு வரும் போதகர் சாரங்கபாணி ஊழியத்துக்கு நல்ல உதாரணமாய் திகழ்கின்றார்.

கண்ணீரும் கம்பலையுமாய் வருவோரை திடப்படுத்தி தேவவார்த்தைக் கூடாக நம்பிக்கையை விதைத்து. ஆரோக்கியமான இதயத்துடன் திரும்ப வைப்பது இவரது பாங்கு. ஊழியத்துக்கூடாக சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்ட போதகர் சாரங்கபாணியின் அயரா முயற்சிகளுக்கு ஆண்டவன் தந்துள்ள கொடைதான் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, முள்ளியவலை, யாழ்ப்பாணம், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு குயின்ஸ்பெரி உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் மிஸ்பா ஊழியகிளை மிஷனரிகள் இயங்குகின்றமை என்றால் அது மிகையல்ல. தம்மைப் போலவே தமது மகனையும் ஊழியத்துக்கு அர்ப்பணித்துள்ளார் போதகர் சாரங்கபாணி. துடிதுடிப்பும் தேவ ஊழியத்தில் பிடிப்பும், மும்மொழிவல்லமையும் கர்த்தர் அவர் மகனுக்கு அளித்துள்ள அருங்கொடைகள்.

இவ் விழாவில் பிரதம அதிதியாக தமிழ் நாடு மதுரை நல்லாயன் சபை போதகர் அப்போஸ்தகர் வண. ஜோசப் பாலச்சந்திரன் பங்கேற்கிறார். பிரபல தென்னிந்திய பாடகர் ரொபர்ட் ராய் தேவகீதம் இசைக்கவுள்ளார். நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மிஸ்பா மிஷனரி ஊழிய போதகர்கள், இளைஞர்கள் கலந்துக் கொள்ளவிருக்கும் நிகழ்வுகள் யாவும் மிஸ்பா தலைமையக மண்டபத்தில் இடம்பெறும். தொடர்ந்தும் மூன்று தினங்கள் நடைபெறும் இவ்விழா தினமும் காலை 8.30 மணியிலிருந்து இரவு 9.30 மணிவரை கர்த்தருக்கான சங்கமமாக ஒளிரவிருக்கின்றமைக் குறிப்பிடத்தக்கது. 17ஆம் திகதி உயிர்த்தெழுந்த ஞாயிறு சிறப்பு ஆராதனை இடம்பெறும்.

எட்டு விசுவாசிகளுடன் உதயமான மிஸ்பா மிஷனரி ஊழியம் இன்று கர்த்தரின் ஆசிர்வாதகங்களுக்கு உட்பட்டு உயரிய வளர்ச்சியை தொட்டு நிற்கிறது. இதற்கு தேவசித்தமும் நிறுவனர் போதகர் சாரங்கபாணியின் கடின பிரயத்தனமுமே காரணமாய் திகழ்கின்றது. எந்த நோக்கத்திற்காக கர்த்தரின் அழைப்பு அவருக்கும் உண்டு. அவர் இதனை செவ்வனே நிறைவேற்றி வருகிறார். இதே இதய வேட்கையுடன் ஊழியப் பணியைத் தொடர தமது மகனுக்கும் போதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த 40ஆவது வருட ஊழிய பணியை நிறைவு செய்கின்ற தருணத்தில் நாமும் வாழ்த்துகின்றோம், கடவுள் உங்களை நிறைவாக ஆசிர்வதிப்பாராக!

'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.





தேவநற்செய்தி ஊழியத்தின் நிறுவனர் போதகர் சாரங்கபாணியின் புதல்வர் பிளசிங் சாரங்கபாணி போதகர் பட்டமளித்துக் கௌரவிக்கப்படவுள்ளார்....



அப்போஸ்தலர் அருட்திரு ஜோசப் பாலசந்திரன்





## தேசத்தின் செழிப்பை மறுபடியும் தாரும்...

ஏசாயா 16:10 பயிர் வெளியிலிருந்து அறுவடை சந்தோஷத்தையும், களிப் பையும், திராட்சத் தோட்டத்தின் பாடலும், ஆர்ப்பரிப்பையும், ஆலை யில் ரசத்தை மிதிக்கிற சந்தோஷ ஆரவாரத்தின் பொருளாதார உயர்வையும் திருப்பி எமது தேசத்திற்குதாரும்'.

தேசத்தில் எடுக்கிற எல்லா முயற்சிக் கும் மக்களின் மனதை உம்பக்கமாக திருப்பும், ஆலோசனைகளை அனுகூலப் பண்ணும் தேவனே.

ஏசாயா 8:20 வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வார்த்தையின் படியே சொல்லாவிட்டால் (மனம் திரும்புதலை குறித்து), விடியற்காலத்து வெளிச்சம் வருமளவும் ஏசாயா 52:7 சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி, உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷ தேவனுடைய பாதங்கள் மலைகளின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றார்.

40 ஆண்டுகளில் மன அழுத்தம், வாழ்வில் நோயிலிருந்தவர்களை விடுவித்த தேவனின் ராஜரீக அழைப்பை காத்து நடத்த தேவன் செய்தகிருபை போதுமானது.

1 இராஜாக்கள் 8:47 அவர்கள் சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்களில் உணர்வடைந்து, மனந் திரும்பி: நாங்கள் பாவஞ் செய்து, அக்கிரமம் பண்ணி, துன்மார்க்கமாய் நடந்தோம் என்று தங்கள் சிறையிருப்பான தேசத்திலே உம்மை நோக்கி வேண்டுதல் செய்து, தேவனிடம் கையேந்தி, அழுது, மனம் திரும்பினால், தேசத்தில் தேவன் குணத்தையும், உயர்வையும் தருவார். இலங்கை தேசம் மறுபடியுமாக கட்டப்பட எல்லா ஆன்மீக வாதிகளும் ஆலயங்களில் கூடி பிரார்த்தனை செய்வோம்.

அனைவருக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.......

வண.ஜே.ஜே சாரங்கபாணி
தலைமை போதகர்
முகத்துவார மிஸ்பா ஆலயம்




















தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

# நகர்வலம்



### எரிபொருள், மின் ஸ்திரமான விநியோகம் இல்லாமல்

# நாள் ஒன்றுக்கு சுமார் 50 மில். டொலர் ஏற்றுமதி வருவாயை இழக்க நேரிடும்

## ஏற்றுமதி, இறக்குமதி, ஏற்றி இறக்கல் தொழில் துறையினர் எச்சரிக்கை

எரிபொருள் மற்றும் மின்சாரத்தின் ஸ்திரமான விநியோகம் இல்லாமல், பொருளாதாரம் நாள் ஒன்றுக்கு சுமார் 50 மில்லியன் அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருவாயை இழக்க நேரிடும் என்று தொழில் துறைத்தலைவர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் ஏற்றி இறக்கல் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள தனியார் துறை நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 23 தொழில்சங்கங்கள், தற்போது நிலவும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு துரிதமான மற்றும் உடனடி நடவடிக்கையுடன் தீர்வு காணாவிட்டால் இலங்கையின் பொருளாதாரத்திற்கும் இதில் தங்கி வாழும் மக்களுக்கும் பல சிக்கலான விளைவுகள் ஏற்படும் என எச்சரித்துள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்புடனும் உறுதியுடனும் செயல்பட வேண்டும், நிறுத்துவதற்கான தீர்வுத்திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும், வேகமாக மோசமடைந்து வரும் நிலைமையை மாற்றியமைக்க வேண்டும்" என்று தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது; வணிகப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி மூலம் ஒவ்வொரு ஆண்டும் 16.7 பில்லியன் அமெரிக்க டொலர்களை மொத்தமாக ஈட்டும் தங்கள் தொழில்துறைகள் தற்போதைய நிலைமை தொடர்ந்தால் ஸ்தம்பித்துவிடும் என்று எச்சரித்தது.மேலும், 4.2 மில்லியனுக்கும் அதிகமான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் அல்லது இலங்கையின் மொத்த உழைக்கும் மக்களில் பாதிப்பேர் மோசமாக பாதிக்கப்படுவார்கள் என்றும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மருந்து மற்றும் எரிபொருளை இறக்குமதி செய்வதில் நாடு போராடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அந்நியச் செலாவணி தேவைப்படுவதால், இதுபாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்று சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன. பொருளாதாரம் முழுமையான சரிவின் விளிம்பில் இருக்கக்கூடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் போகலாம், மேலும் வெகுஜன வேலையின்மை மற்றும் சமூக அமைதியின்மை உடனடியாக ஏற்படும். கப்பல் சேவைகள் மற்றும் விமான சேவைகள் குறைப்பை சுட்டிக்காட்டியுள்ளன, இது விநியோகச் சங்கிலிகள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் செயல்பாடுகளை பின்னடையச் செய்துள்ளது. நிலைமை கவனிக்கப்படாமல் இருந்தால், நிதித்துறையில் ஸ்திரமின்மை ஏற்படக்கூடும் என்பது குறித்து சங்கங்கள் தமது கவலையை தெரிவித்துள்ளன.

பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளையும் பிரதிநிதித் துவப்படுத்தும் 38 முக்கிய சங்கங்கள் கையெழுத்திட்ட கடிதத்தில், அனைத்து அரசியல்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கிவைத்து விட்டு, தேவைப்பட்டால் உடனடியாக இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முன்வருமாறு கடுமையாக வலியுறுத்தியுள்ளதுடன் தேசிய நலன் மற்றும் இலங்கை மக்களின் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

# தென் மாகாணத்தில் புத்தாண்டு வியாபாரம் களைகட்டியுள்ளது

## பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வம்

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாணத்தில் சித்திரை புத்தாண்டு வியாபாரம் களை கட்டியுள்ளது. வாடிக்கையாளர்கள் பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடும் வரட்சியின் பின்னர் கடந்த சில தினங்களாக மாலை வேளையில் மழை பெய்து வருகின்றது. இதனையும் பொருட்படுத்தாமல் மக்கள் புத்தாண்டுக்காக பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

அத்தியாவசிய பொருட்களை ச.தொ.ச. விற்பனை நிலையங்களில் பெற்றுக்கொள்ள மக்கள் முண்டியடித்துச் செல்கின்றனர். மேலும் புத்தாண்டு தினங்களில் பயணங்கள் மேற்கொள்ள போதுமான டீசல், பெற்றோல் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளவும் மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட கியூ வரிசையில் காத்திருப்பதையும் கிராமப் புறங்களிலிருந்து பெருந்திரளான மக்கள் நகர்ப்புறங்களுக்கு சென்று பொருட்களை கொள்வனவு செய்தும் வருகின்றதையும் காண முடிகிறது.

எனினும் மக்கள் தமது பணப்பை, பெண்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் பொலிஸார் வேண்டுகின்றனர். பொலிஸாரும் மக்களின் நலன் கருதி பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அண்மைக் காலங்களில் திருட்டுச் சம்பவங்கள் இப்பகுதியில் அதிகரித்து காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் சாஹிரா ஆரம்ப பிரிவின் நிறைவு விழா



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலையின் 14 வது ஆண்டு நிறைவு விழாவும், புத்தளம் பீ.சீ. எம்.எச். நிறுவன ஏற்பாட்டிலான புத்தகப் பைகள் வழங்கும் வைபவமும் அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் எம்.ஜவாத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து கொண்டார். பாராளுமன்ற உறுப்பினரால் பாடசாலையின் 14 வருட பூர்த்தியை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டது. இவ்வைபவத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# வாகன விபத்தில் ஆசிரியை பலி

கேகாலையில் மொலகொடை எனும் இடத்தில் இடம்பெற்ற, வாகன விபத்தில் கரன்டுபொன, தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை எப். பினோதியா வயது (54) காலமானார். இவர் ரமழான் மாத தராவீஹ் தொழுகையை பள்ளிவாசலில் நிறைவு செய்து விட்டு, கண்டி, கொழும்பு பாதையை கடந்து வீடு திரும்பும் போது இக்கோர சம்பவம் (10) இடம்பெற்றுள்ளது.

இவ் ஆசிரியையின் ஜனாஸா நல்லடக்கம் இவரின் பிறப்பிடமான, மாவனல்லை உயன்வத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பெரும் திரளான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

# கல்விமான் நழ்ரி அதிபரின் மறைவு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது

## முன்னாள் எம்.பி அஸ்லம் அனுதாபம்

**பேருவளை விசேட நிருபர்**

தர்காநகரின் கல்விமானும் பிரபல சமூக சேவையாளருமான ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபருமான எம்.எப்.எம் நழ்ரியின் திடீர் மறைவினால் தான் கவலையடைந்ததாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தர்கா நகரிலும் பேருவளை பகுதியிலும் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்த மறைந்த எம்.எப்.எம் நழ்ரி அதிபர் மேற்கொண்ட பணிகள் காலத்தால் அழியாதவை.

ஓர் ஆசானுக்கு இருக்க வேண்டிய நற்பண்பும் , பொறுமையும் , சமூக உணர்வும் மர்ஹூம் அதிபர் நழ்ரியிடம் சிறந்து காணப்பட்டது. தேசிய மட்டத்தில் புகழ்பெற்ற தர்கா நகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயத்தின் அதிபராக பதவி வகித்து அப் பாடசாலையை கல்வி, விளையாட்டு உட்பட ஏனைய துறைகளில் கட்டியெழுப்ப இரவு பகல் பாராது பணிபுரிந்தார். பாடசாலையை முன்னேற்றுவதற்காக பிரதேச அரசியல்வாதிகள், கல்வி அதிகாரிகள், பரோபகாரிகளை அணுகி அவர்கள் மூலமாக பல தேவைகளை பாடசாலைக்கு பெற்றுக் கொடுத்தார்.



தர்காநகர் கல்வித் துறையில் உன்னத இடத்தை வகிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் அவர் தனது பணியை மேற் கொண்டார். அதே போன்றே மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையையும் சிறந்தொரு நிலைக்கு கொண்டு வந்து தமது ஆளுமையை வெளிக் காட்டினார்.

களுத்துறை மாவட்ட அகதிய்யா சம்மேளனத்தில் உயர் பதவி வகித்த இவர் அஹதிய்யா மாணவர்களின் ஆன்மீக கல்வி வளர்ச்சிக்காகவும் பாரிய சேவைகளை செய்தார். அன்னாரது பணியை வல்ல நாயன் பொருந்திக்கொள்ள வேண்டுமென தான் பிரார்த்திப்பதாகவும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார். அதேவேளை, மர்ஹூம் நழ்ரியின் மறைவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் ஆகியோரும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி







**உடப்பு குறூப் நிருபர்**

புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயத்திலிருந்து 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 3 மாணவிகள் சித்தியடைந்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் ஜனாப் முகம்மது சரீக் தெரிவித்தார். எம்.எச். ஹம்தா(149), எம். எவ். எவ். இவ்ரா(170), எம். என். எவ். நஸ்லா(152) ஆகியோரே சித்தியடைந்த மாணவிகளாவார்கள்.

# 100 வறிய குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

புனித ரமழானை முன்னிட்டு நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழக உறுப்பினர்களால் நேகம முஸ்லிம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 100 குடும்பங்களுக்கு பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளதாக நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ஜே.எச். எம்.ஹஸ்ரான் தெரிவித்தார்.

நேகம நிவ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் உள்நாட்டில் ,மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்காக சென்றுள்ள அங்கத்தவர்களின் மூன்று இலட்சத்திற்கும் அதிகமான பணத் தொகையினால் இந்த உலர் உணவுப் பொதிகள் பொதி செய்யப்பட்டு நேகம கிராமத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நூறு ஏழைக் குடும்பங்களுக்கு கழக உறுப்பினர்களினால் வழங்கப்பட்டுள்ளது.



ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் இவ் வருட மாணவத் தலைவர்களுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வில் விசேட அதிதியாக கலந்துகொண்ட பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும் சட்டத்தரணியும் மற்றும் காலி மாநகர சபை உறுப்பினருமான எஸ்.எம்.நிலாம், பாடாலையின் அதிபர் எம். எம். ரிசான், பிரதி அதிபர் டி. யூ. எஸ். ஆரூஸியா மற்றும் உதவி அதிபர் எம். சீ. எஸ்.பாயிஸா ஆகியோர் வரவேற்று அழைத்து வரப்படுவதைப்படத்தில் காணலாம்.
படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

### மாத்தறை நகரில்;

# முடிச்சுமாரிகளின் நடமாட்டம் அதிகரிப்பு

**மாத்தறை தினகரன் நிருபர்**

தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக மாத்தறை நகருக்கு வரும் பொதுமக்களை முடிச்சுமாரிகள், வழிப்பறிக்கொள்ளையரிடமிருந்து பாதுகாப்பதற்காக விஷேட வேலைத் திட்டமொன்றை மேற்கொண்டுள்ளதாக மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிஷாந்த சொய்ஸா தெரிவித்தார்.

வெளியூர்களிலிருந்து மாத்தறை நகருக்கு, அக்குரஸ்ஸ, ஹக்மன, வெலிகம, கம்புருபிடிய, தெவிநுவர, திக்குவல்லை ஆகிய இடங்களிலிருந்து வரும் பெரும் தொகையான மக்களுக்கு பாதுகாப்பளிக்கவே இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

அங்காடி வியாபாரஸ்தலங்களிலும், சனநெரிசல் உள்ள இடங்களிலுமே முடிச்சுமாரிகள் தங்கள் கைவரிசைகளைக் காட்டுவார்கள் என்பதனால் சிவில் உடைதரித்த பொலிஸார் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

நகருக்கு குடிபோதையுடன் வரும் வாகன சாரதிகளை மடக்கிப் பிடிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொருட்களை கொள்வனவு செய்ய நகருக்கு வரும் பெண்கள் ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்ந்துகொள்ளுமாறும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.



தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வன்னி ஹோப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வரகபொல தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையினால் வ ரகபொல,தும்மலதெனிய,அத்தனாவல ஆகிய பிரதேசத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.வரகபொல தமிழ் சமூக அபிவிருத்தி பேரவையின் தலைவர் திருமதி பீ.கோமதி, செயலாளர் வி.சத்தியசீலன்,ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் குமார் ஆகியோர் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். வரகபொல அம்பேபுஸ்ஸ காளிஅம்மன் கோவில் குருக்கல் பாலசுப்ரமணியம் ஐயரும் இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

# அலிக்கானின் 'நெஞ்சில் பூத்த நெருப்பு' தென்கிழக்கு உபவேந்தரிடம் கையளிப்பு



பல்துறைக்கலைஞர் என்.எம். அலிக்கான் எழுதிய கன்னி கவிதைத்தொகுப்பான 'நெஞ்சில் பூத்த நெருப்பு' எனும் நூலினை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரிடம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வைத்து கையளித்தார்.

சமூகப்பிரச்சினைகளை எடுத்தியம்பி, அதனை சமூகத்துக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் இந்நூல் கவிதைகளாக தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல்துறைக் கலைஞரான இவர், கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவரது கலைத்துறைப் பயணம் பாடசாலை படிக்கும் காலத்தில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது. பாடசாலை காலத்தில் பேச்சு, கவிதைப் போட்டிகளில் கலந்து கொண்டு நிறைய பரிசில்களைப் பெற்றுள்ளதோடு, நாடகத்துறையிலும் நிறைய பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டு மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான நாடகப் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்.

கவிதை எழுதுவது முதல் பாடல் அபிநயம், நாடகம், பாடல் பாடுதல், கதை எழுதுதல், ஆய்வு செய்தல் என பல்துறைகளில் தற்போதும் ஈடுபட்டு வருகிறார்.

இவரது கவிதை ஆற்றலைக் கௌரவித்து 'கவியுக நாயகன்' எனும் விருதை 2012 இல் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

# கிழக்கின் குரல்



## அரசியல் தீர்மானங்கள், மக்களின் நலனுக்கு கை கொடுப்பவையாக இருப்பது அவசியம்

(காரைதீவு குறூப் நிருபர்)

அரசியலுக்கு முட்டுக் கொடுப்பதை விட வீட்டுக்கு முட்டுக் கொடுத்தால் வாழ்வு வளம் பெறும் என, காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

கோரக்கர்கிராம ஆலய சம்மேளனம் நடாத்திய பணிநயப்பு பாராட்டுவிழாவில் உரையாற்றிய

அவர்,மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 35 வருடகால யுத்த காலத்தில் மக்கள் அனுபவித்திராத துன்ப,துயரங்களை இப்போது அனுபவிக்க நேரிட்டுள்ளது. எங்கு பார்த்தாலும் கியூ வரிசைகளே. கொரோனாவால் உயிர் போகும் என்று பயந்த மக்கள், இன்று பசி,பட்டினியால் உயிர் போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பணத்தை வைத்துக்கொண்டு பெற்றோலுக்கும், டீசலுக்கும், எரிவாயுவுக்கும் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது.இதனால், வாக்களித்த மக்களும் விரக்திக்குள் செல்லும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்மாந்துறை, கோரக்கர்கிராம அகோர மாரியம்மன் ஆலயம் மற்றும் கோரக்கர் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர், கிராமத்தின் ஆலயம், கல்வி, சமயம், சமூக, கிராம மேம்பாட்டிற்கு கடந்த காலங்களில் உதவிய 27 சமூக சேவையாளர்களை அழைத்து பணிநயப்பு பாராட்டு விழாவை (10) நடாத்தினர்.

கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்ற இவ் விழாவில், கிழக்கில் புகழ்பெற்ற சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முக மனேஸ்வரக் குருக்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பொன்னாடை போர்த்தப்பட்டு, விஷேட வாழ்தது மடல் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



ஆலய பரிபாலனசபை சார்பில் தலைவர் ம.பாலசுப்பிரமணியம் தலைமையில் உபதலைவர் வி.மோகன், செயலாளர் த.அழகுராஜன், பொருளாளர் கி.சசிகரன் ஆகியோர் உரையாற்றினர்.

ஏற்புரைகளை சிவஸ்ரீசண்முக மகேஸ்வரக் குருக்கள், உதவிக் கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, தவிசாளர் கே.ஜெயசிறில், ஆலய தலைவர் இரா.குணசிங்கம் ஆகியோர் வழங்கினர். கோரக்கர் மாணவிகளின் கண்கவர் நடனங்கள் இடையிடையே நடைபெற்றன.

## மட்டக்களப்பு,கல்முனை வீதியில் விபத்து, நால்வர் படுகாயம்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் இடம்பெற்ற பாரிய விபத்துச் சம்பவத்தில் நால்வர் படுகாயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது...

கல்முனை பக்கமிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தும், மட்டக்களப்பிலிருந்து கல்முனைப் பக்கம் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்துச் சம்பவித்ததாக தெரியவருகின்றது. குறித்த காரில் தாய், தந்தை, மற்றும் அவர்களுடைய இரு பிள்ளைகளும் பயணித்துள்ளனர்.

காரில் பயணித்த நால்வரும், பலத்த காயங்களுக்குள்ளாகி, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து இடம்பெற்ற பின்னர் சிறிது நேரம் போக்குவரத்து நெரிசல் அவ்விடத்தில் ஏற்பட்டது.

ஸ்தலத்திற்கு விரைந்த களுவாஞ்சிகுடி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை அப்புறப்படுத்தி போக்குவரத்தைச் சீர் செய்ததுடன், விபத்துச் சம்பவம் குறித்து விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

## எரிவாயுவுக்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் செல்ல மறுப்பு

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நேற்று அதிகாலை முதல் எரிவாயு சிலிண்டர்களுக்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றதுடன் வீடு திரும்பினர்.

இம்மைதானத்தில் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலையடுத்து, அதிகாலை முதல் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கு வரிசையில் காத்திருந்தனர்.

எனினும் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இம்மைதானத்தில் இருக்கவில்லை.எனினும் மக்கள் வெளியேறாமல் நம்பிக்கையுடன் காத்திருந்தனர்.



இதேநேரம் பலர் எவ்வாறாயினும் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக் கொண்டே இடத்தைவிட்டு நகர்ந்து செல்வோம் எனவும் அடம்பிடித்தனர். எரிவாயுவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகளால், சித்திரைப்புத்தாண்டை கொண்டாடுவதற்கும் இயலாதுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

பலர் தமது தொழிலுக்கு செல்லாமல் கூட எரிவாயு சிலிண்டர்களுக்காக காத்திருந்தனர்.

இன்னும் சிலர் தூர பிரதேசத்தில் இருந்து ஆட்டோ கூலியும் கொடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்திருந்தனர்.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து மக்கள் குறை தீர்க்க முன்வர வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுரவணையடியூற்று சிறார்களுக்கு பிரான்ஸிலிருந்து கற்றல் உதவிகள்

( காரைதீவு குறூப் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய தும்பங்கேணி சுரவணையடியூற்று கிராம பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் பாடசாலை அனைத்து உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. பிரான்ஸில் மறைந்த செல்வி ஹரணிகா மொறிஸின் இரண்டாவது வருட மறைவு தினத்தையொட்டி, இவை,வழங்கப்பட்டன.

சுரவணையடியூற்று கிராம வரலாற்றில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட விநாயகர் ஆரம்பப் பாடசாலைக்கு தளபாடங்களும், அங்கு கல்வி பயில வந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.காரைதீவு பிரதேச சபையின் தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் இவற்றை வழங்கினார். இந்நிகழ்வு, கிராம சபை தலைவர் எஸ். உதயகுமார் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது.

கல்வி பயிலும் மாணவர்கள் அவர்களின் பெற்றோர்கள் அனைவரும் இதில்,கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா இத்திட்டத்தின் இணைப்பாளர் ஆசிரியர் என். ராஜேந்திரன் உள்ளிட்ட பலரும் நிகழ்வை சிறப்பித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு மரணித்த செல்வி ஹருணிகாவின் ஆத்மா சாந்தியடைய 2 நிமிட மௌவுன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. மாவேற்குடா பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவநேசராசா ஆசியுரையும் வழங்கினார்.

## நிந்தவூரில் வீடற்றோருக்கு வீடுகள் வழங்கும் இரண்டாம் கட்ட பணிகள் ஆரம்பம்

(நிந்தவூர் குறூப் நிருபர்)



அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் "பெஸ்ட் ஒப் யங்" சமூக சேவைகள் அமைப்பு "வாழ்வில் வசந்தம்" கிராமிய எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ், வீடற்றோருக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் இரண்டாம் கட்டப் பணிகளைஆரம்பித்துள்ளது. இவ்வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் (11) இடம்பெற்றது.

பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ. எம் நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம் அப்துல் லத்தீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் ஆலோசகர் எஸ். அஹமது, செயலாளர் ஏ. புஹாது, கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.எம். பவாஸ் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது நிந்தவூர் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நிந்தவூர்மற்றும் 23ம் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வீடு வசதி இல்லாத இரண்டு பயனாளிகளுக்கு புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. நிந்தவூரைச் சேர்ந்த இரு தனவந்தர்களின் நிதிப்பங்களிப்புடன் இந்த இரண்டு வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதன் மூலம் வாழ்வதற்கு ஓரளவேனும் வசதியான வீடின்றி கஷ்டப்பட்ட இரண்டு ஏழைக் குடும்பத்தினரின் நிரந்தர வீட்டுக்கான கனவு நிறைவேறுகிறது.



அக்கரைப்பற்று ஆலையடிவேம்பில், மக்கள் வங்கியின் தன்னியக்க இயந்திரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முகாமையாளர் எம்.பி.எம். அன்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மக்கள் வங்கியின் பிரதி பொதுமுகாமையாளர் பி.எம். பிரேமானந்த் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். நிகழ்வுகளில் ஆலையடிவேம்புபிரதேசசெயலாளர் வி.பபாகரன் மற்றும் அக்கரைப்பற்று மாநகரசபை மேயர் அதாவுல்லா அகமட் சகி, ஆலையடிவேம்பு பிரதேச சபைதவிசாளர் த.கிரோஜாதரன் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எச்.டி.குணரெட்ண , பிராந்தியஉதவிமுகாமையாளர் டபிள்யு.எம்.டி.வீரசிங்க, எஸ்.பி.சூரியகுமாரன் வைத்தியர் த.தர்ஷிகா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படம்: அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

## முஸ்லிம் சிந்தனையாளர் எம்.ஐ.எம் மொஹிடீன் நினைவு கூட்டத்துக்கு ஏற்பாடு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

எம்.ஐ.எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்,அண்மையில் இறையடி சேர்ந்த ஆய்வாளர் எம்.ஐ.எம். மொஹிடீனின் ஆக்கங்கள் செயல்பாடுகள் உள்ளடங்கிய நூல்கள், கையேடுகள் மற்றும் ஆவணங்களின் கண்காட்சி நிகழ்வுகளை நடாத்துவதற்கான சகல ஒழுங்குககளையும் மேற்கொண்டு வருகின்றது .

இது தொடர்பான ஓர் ஆலோசனைக்கூட்டம் அண்மையில் கலாநிதி. ஜௌபர் எம். இஸ்மாயில் தலைமையில் அக்கரைபற்று மங்கோ கார்டன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நினைவுக்கூட்டத்தை மிகவும் சிறப்பாக நடாத்துவதற்கான எல்லா ஒழுங்குகளையும் அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமுகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்திற்கு ஆய்வாளர் எம்.ஐ. எம். மொஹிதீனோடு ஒருமித்து பயணித்த அவரது சகபாடிகள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அரச உத்தியோகஸ்தர்கள் கட்டுரையாளர்கள், ஆய்வாளர்கள் என பல தரப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஆய்வாளர் மொஹினின் நூல்கள் , ஆக்கங்கள், கைநூல்கள், கட்டுரைகள் போன்றவைகளை விஷேடமாக அவரது புள்ளி விபரக்கோவைகள் அனைத்தையும் துரித கதியில் ஒன்று சேர்த்தல், அவரோடு பயணித்த பேராசிரியர்கள் மற்றும் ஆய்வாளர்கள் போன்றோர்களை வரவளைத்து அக்கரைப்பற்றில் ஒரு கூட்டத்தை நடாத்தவும் இங்கு தீர்மானிக்கக்பட்டது. இதேவேளை அவரது நூல்கள் , ஆக்கங்கள், கைநூல்கள், கட்டுரைகள் போன்றவைகளை வைத்திருப்போர் அக்கரைபற்று 2, புக் ஹவுஸ்சில் அமைந்துள்ள எம்.ஐ.எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலைய செயலாளர், சிராஜ் மசூரோடு தொடர்பு கொண்டு ஆவணங்களை வழங்கி உதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

## வீதி விபத்தில் வயோதிப தாய் உயிரிழப்பு

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதி கிளபென்பேக் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து கிண்ணியா நோக்கி பயணித்த டிப்பர் வாகனமும், கிண்ணியா பிரதேசத்தில் இருந்து திருகோணமலை நோக்கி வந்து கொண்டிருந்த வேன் ஒன்றும் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில், யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ரத்னகலாவதி (72வயது) என்பவரே உயிரிழந்ததாக தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சுற்றுலா வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒன்பது பேரில், ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயம் அடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த வயோதிபரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.விபத்து தொடர்பிலான விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அத்தியாவசியப் பொருட்களை

## பதுக்கி அதிக விலைக்கு விற்பதாக முறைப்பாடு

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

அனுமதிப்பத்திரம் இன்றி மண்ணெண்ணெய், டீசல்,பெற்றோல், எரிவாயு உட்பட பல்வேறு அத்தியாவசியப்

பொருட்களை பதுக்கிவைத்து அதிகூடிய விலையில் விற்பனை செய்வதாக தகவல் கிடைத்துள்ளது.

எனவே இவ்வாறான வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். எனவே இவ்வாறு பதுக்கி வைத்து விற்பதை உடனடியாக நிறுத்துமாறும் தவறும் பட்சத்தில் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்முனை தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோரியுள்ளார். அவ்வாறான வியாபாரிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பொது மக்களை கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அன்னைசாரதா பாடசாலையின் தசாப்த விழா, முதல் அதிபருக்கு பொன்னாடை

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

அக்கரைப்பற்று அன்னை சாரதா கலவன் பாடசாலையின் தசாப்த விழா நிகழ்வுகள், நேற்று மாலை மிகவும் கோலகலமான முறையில் இடம்பெற்றது.

பாடசாலையின் அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள் மற்றும் கல்வி சமூகத்தின் முழுதான பங்களிப்புடன் பாடசாலையின் அதிபர் கே.கோமளம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதம அதிதிகளாக திருக்கோவில் வலய கல்வி பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், விசேட அதிதிகளாக பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன் ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.குணாளன், ஓய்வு பெற்ற அதிபரும் பாடசாலையின் முதலாவது அதிபருமான பி.தணிகாசலம் மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் பி.பரமதயாளன் திருக்கோவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ்.ரவீந்திரன், பொது சுகாதார பரிசோதகர் ப.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் தசாப்த விழா நினைவுப் பெயர்பலகைதிரைநீக்கம் செய்து வைக்கப்பட்டதன் பின்னர், மேடை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் மேடையில் அரங்கேற்றப்பட்டன. அதிதிகள் மற்றும் பார்வையாளர்கள் அனைவரது வரவேற்பையும் இந்தக் கைவண்ணங்கள் பெற்றுக்கொண்டன.

குறிப்பாக கண்ணகி வழக்குரை நாடகம், வில்லுப்பாட்டு போன்ற நிகழ்வுகள் அனைவரது கவனத்தையும் ஈர்க்கச் செய்தது.

இதேநேரம், பாடசாலையின் முதல் அதிபராக நியமனம் பெற்று பாடசாலை வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பி.தணிகாசலம், பாட்சாலை கல்வி சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

தொடர்ந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பங்காற்றிய வலயக்கல்விப் பணிப்பாளர் பிரதேச செயலாளர் பிரதேச சபை தவிசாளர் ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் பாடசாலை அதிபர் அபிவிருத்திக்குழு செயலாளர் மற்றும் உறுப்பினர் பாடசாலை வரலாற்றில் புலமைபரிசில் பரீட்சையில் அதிக புள்ளியினை பெற்ற மாணவி உள்ளிட்டோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கடந்த 6 வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த 92 மாணவர்கள் அதிதிகளினால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தினகரனின் 90ஆவது நிறைவையொட்டி

தினகரன் வாரமஞ்சரி வானவில்

# உடப்பில் ஐம்பெரும் விழா

## வாழ்நாள் சாதனையாளர்கள் வாழும் போது வாழ்த்தி கௌரவிப்பு













படங்கள்:
உடப்பு குறூப் நிருபர் கே. மகாதேவன், எஸ். தனேந்திரன்








தினகரனின் 90வது ஆண்டு நிறைவையொட்டி சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் நடத்திய ஐம்பெரும் விழா, தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வண்ண வானவில் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் கடந்த 9ஆம்திகதி சனிக்கிழமை உடப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இதனை உடப்பு "திவ்விய ஒளி கலை மன்றம்" ஏற்பாடு செய்திருந்தது. இதில் இளம் சாதனையாளர்கள், சாதனையாளர்கள், வாழ்நாள் சாதனையாளர்கள் என கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் ஐந்தாம் தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கும்,100க்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இதன்போது, பிரம்மஸ்ரீ சிவனேஷ்வர சர்மா, தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், கலாநிதி பேராசிரியர் வ. சிவலோகதாசன், ஆராய்ச்சிக்கட்டு பிரதேச சபைத் தலைவர் க. தெட்சணாமூர்த்தி, சங்கவி பிலிம்ஸ் நிறுவனப் பணிப்பாளர் துரைராசா சுரேஷ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று பெரிய பிள்ளையார் ஆலய மகோற்சவம்

**வாச்சிக்குடா விஷேட நிருபர்**
**வி.சுகிர்தகுமார்**

அக்கரைப்பற்று பகுதி கருங்கொடித்தீவுறை அருள்மிகு பெரிய பிள்ளையார் ஆலய (ஸ்ரீ சித்தி விநாயகர் மகா தேவஸ்தானம்) சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழாவின் கொடியேற்றம் அண்மையில் நடைபெற்றது.

சிவபூமி என அழைக்கப்படும் ஈழமணித்திருநாட்டின் தென்கிழக்கில் வரலாற்றுச் சிறப்புடன் இயற்கை எழில் நிறைந்த அக்கரைப்பற்று பதிதனில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் பெரிய பிள்ளையார் ஆலயத்தின் சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவம் 04ஆம் திகதி வாஸ்து சாந்தி கிரியைகளுடன் ஆரம்பமாகி 05ஆம் திகதி கொடியேற்றம் நடைபெற்றது.

இங்கு 14ஆம் திகதிவரை திருவிழாக்கள் இடம்பெறும். 15ஆம் திகதி இடம்பெறும் தேரோட்டம் 16ஆம் திகதி இடம்பெறும் தீர்த்தோற்சவம் கொடியிறக்கத்துடனும் 17 ஆம் திகதி இடம்பெறும் திருப்பொன்னூஞ்சல் பூங்காவனத் திருவிழா, 18ஆம் திகதி ஸ்ரீ வைரவர் பூஜை, 19ஆம் திகதி இடம்பெறும் ஐயனார் பூசையுடனும் இவ் உற்சவம் நிறைவுறும். கடந்த 05ஆம் திகதிகொடியேற்றத்திற்கான கொடிச்சீலை எடுத்துவரும் கிரியைகளும் வழிபாடுகளும் சிவஸ்ரீ ப.கு. கேதீஸ்வரக்குருக்களின் தலைமையில் அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று அங்கிருந்து கொடிச்சீலை அக்கரைப்பற்று ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலயத்தை அடைந்து பெரிய பிள்ளையார் ஆலயத்தை சென்றடைந்தது.

பின்னர் அங்கு யாகபூஜைகள் நடைபெற்றதுடன் கொடிச்சீலைக்கான விசேட பூஜைகளும் நடைபெற்றன. தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருந்த எம்பெருமான் சித்தி விநாயகர் சகிதம் ஏனைய பரிவார மூர்த்திகளும் கொடியேற்றம் இடம்பெறும் இடத்திற்கு பக்தர்களினால் தூக்கிச் செல்லப்பட்டு அமர்த்தப்பட்டனர்.

தொடர்ந்து கொடியேற்றமானது பக்தர்களின் அரோகரா வேண்டுதலுக்கு மத்தியில் மங்கள வாத்தியம் முழங்க நடைபெற்றதுடன் கொடிதம்பத்திற்கான பூஜைகளும் நடைபெற்றன.

ஆலய தலைவர் மு.கு.வடிவேல் தலைமையில் இடம்பெறும் சித்திரா பௌர்ணமி பிரம்ம மகோற்சவ திருவிழாவின் கிரியைகள் யாவும் உற்வசகால பிரதமகுரு பிரதிஷ்டா இளவரசன் பிரதிஷ்டா கலாநிதி தற்புருச சிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முகவசந்தன் குருக்கள் தலைமையில் இடம்பெற்று வருவதுடன் சர்வ சாதகாசிரியராக சிவஸ்ரீ ந.கு.பத்மநிலோஜ சிவமும் இதில் கலந்து கொண்டு வருகின்றார்.

ஆலயத்தின் வரலாற்றில் முதற்தடவையாக 15ஆம் திகதி தேரோட்டம் இடம்பெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.




தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் 25 ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வருடாந்தம் நடாத்தப்படும் இலவச கண் பரிசோதனை கொழும்பு 14ல் அமைந்துள்ள கலைமகள் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அதிபர் முருகானந்தம், தலைவர் நிலாமினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். முன்னாள் தலைவர் என். ராஜா, பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், பிரதி பொதுச் செயலாளர் மாவை. சோமசுந்தரம், நிர்வாகச் செயலாளர் திருமதி புவனேஸ்வரி ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

# வியட்நாமின் தீவுகளை இராணுவ மயப்படுத்தும் சீனா

## உடனடியாக நிறுத்துமாறு வியட்நாம் வேண்டுகோள்



வியட்நாமின் தீவுகளை இராணுவமயப்படுத்துவதை சீனா நிறுத்திவிட்டு வியட்நாமின் இறைமையை கௌரவப்படுத்தும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என வியட்நாமிய வெளிவிவகார அமைச்சின் பதில் பேச்சாளர் சீனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்சீனக் கடலில் குறைந்தபட்சம் மூன்று தீவுகளை சீனா இராணுவ மயப்படுத்தியிருப்பதாகவும் அது அத்தீவுகளின் மீது வியட்நாம் கொண்டிருக்கும் இறைமையை கேள்விக்குட்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், இப்பிராந்திய நாடுகளின் கவனத்தை இச் செய்கை ஈர்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சீனா, நாட்டின் இறைமையை மதித்து நடந்துகொள்ள வேண்டுமென்றும் இத்தீவுகளை இராணுவ மயப்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் கூறியுள்ள இவர், இப் பிராந்தியத்தில் பதற்ற நிலையை ஏற்படுத்தக்கூடிய சகல நடவடிக்கைகளையும் சீனா நிறுத்த வேண்டும் என்றார்.

அமெரிக்காவின் இந்தோ பசுபிக் கொமாண்டர் ஜோன் சி. அக்குயிலிநோ கடந்த மார்ச் மாதம் அமெரிக்க செய்திச் சேவையொன்றுக்கு அளித்த பேட்டியில், இந்தத் தீவுகளில் சீனா கப்பல் மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் லோசர் மற்றும் ஒலித்தடைகளை ஏற்படுத்தும் உபகரணங்களையும் பொருத்தி இருப்பதாகவும், தாக்குதல் விமானங்கள் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இது பிராந்திய அமைதிக்கு குந்தகமாக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

வியட்நாமின் ஆதிகாலத்தில் உள்ள ஏழு தீவுகளில் மூன்று தீவுகள் சீனாவின் ஆதிக்கத்தில் உள்ளதாகவும் இவர் மேலும் கூறியிருந்தார். இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் அன்டோனியோ சார்பியொ வியட்நாம் ஏனைய பிராந்திய நாடுகளுடன் இணைந்து தென்சீனக் கடலில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என யோசனை வெளியிட்டுள்ளார்.

# பங்களாதேஷுடனான டெஸ்ட் தொடர்: அள்ளிச் சுருட்டியது தென்னாபிரிக்கா

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 332 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா முழுமையாக கைப்பற்றியுள்ளது.

போர்ட் எலிசெபத் மைதானத்தில் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி, 453 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டீன் எல்கர் 70 ஓட்டங்களையும் டெம்பா பவுமா 67 ஓட்டங்களையும் கீகன் பீட்டர்சன் 64 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சில், தைஜூல் இஸ்லாம் 6 விக்கெட்டுகளையும் காலீல் அஹமட் 3 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய பங்களாதேஷ் அணி, 217 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, முஷ்டபிசுர் ரஹ்மான் 51 ஓட்டங்களையும் டமீம் இக்பால் 47 ஓட்டங்களையும் யாசிர் ஷா 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து 236 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா அணி, 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களை



பெற்றிருந்த போது தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. இதனால், பங்களாதேஷ் அணிக்கு தென்னாபிரிக்கா அணி, 413 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சாரல் எர்வீ 41 ஓட்டங்களையும் வெர்னைன் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்து வீச்சில், தைஜூல் இஸ்லாம் 3 விக்கெட்டுகளையும் மெயிடி ஹசன் 2 விக்கெட்டுகளையும் காலீல் அஹமட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 413 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பங்களாதேஷ் அணி, 80 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், தென்னாபிரிக்கா அணி 332 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, லிடொன் தாஸ் 27 ஓட்டங்களையும் மெயிடி ஹசன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

கேசவ் மஹாராஜ் 7 விக்கெட்டுகளையும் சிம்ரொன் ஹார்மர் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் தென்னாபிரிக்காவின் கேசவ் மஹாராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

## வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய

# மாணவத் தலைவிகள் நிகழ்வில் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா பங்கேற்பு



**தெஹிவளைகல்கிஸை விசேட நிருபர்**

வெள்ளவத்தை சைவ மங்கையா் வித்தியாலய மாணவத் தலைவிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவத் தலைவிகள் தினம் ' hope' கல்லூரி மண்டபத்தில் மாணவத் தலைவி நீலாதக்சி பிரியாதக்ஸன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா கலந்து கொண்டார் , கல்லூரி அதிபா் அருந்ததி ராஜவிஜயன், கல்லூரியின் முகாமைத்துவ முகாமையாளர் மாலா சபாரத்திணம் மற்றும் ஆசிரியைகள் ஏனைய பாடசாலைகளின் மாணவத் தலைவிகள் குழாமும் கலந்து கொண்டன. மாணவத் தலைவிகள் தலைமைத்துவத்தினை எவ்வாறு நிர்வகித்தல், ஒழுக்கம், விளையாட்டு, கல்வி, சமூக சேவை போன்ற தலைப்பில் பிரதம அதிதி அரவிந்த டி சில்வா அங்கு உரையாற்றினார். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவத் தலைவிகளுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

OBSERVER SLT-MOBITEL 44th SCHOOL CRICKETER OF THE YEAR 2022
Recognising talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

**மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022**

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் **OBSERVER SLT- MOBITEL** மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

**வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:**

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

**SLT- MOBITEL** நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-04-2022 இல. 03




# விளையாட்டு கழகத்திற்கு நிலவிரிப்பு வழங்கி வைப்பு



**தோப்பூர் குறூப் நிருபர்**

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மல்லிகைத்தீவு கந்தையா அறக்கட்டளை நிதியத்தினூடாக சம்பூர் ஸ்டார் கடின பந்து விளையாட்டு கழகத்திற்கு (10) நில விரிப்பு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மல்லிகைத்தீவு கந்தையா அறக்கட்டளையின் சார்பாக கந்தையா பொன்னம்மா ஆகியோரின் பிள்ளைகளான கந்தையா இராசநாயகம், கந்தையா கோணேஸ்வரன்,கந்தையா ராஜகோபால், பேரப்பிள்ளையான நடேசபிள்ளை சதீஷ்கண்ணா ஆகியோரால் எழுபதாயிரம் ரூபா பெறுமதியான கடினப் பந்து நிலவிரிப்பு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையின் உதைபந்தாட்ட போட்டி



**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையின் 14 வயதுக்கு கீழ் மாணவர்கள் பங்கு கொண்ட உதைபந்தாட்ட போட்டி நிகழ்வு கடந்த 31ஆம் திகதி வித்தியாலய விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

மஞ்சள் பச்சை சிவப்பு நீலம் ஆகிய நான்கு அணிகள் பங்கு கொண்ட ஏழு பேர்களைக் கொண்ட உதைபந்தாட்ட போட்டி தொடரில் இறுதி ஆட்டத்தில் மஞ்சள் அணியும் பச்சை அணியும் மோதியதுடன் மஞ்சள் அணி இரண்டு கோல்களைப் போற்றி வெற்றி பெற்றது.

உதைப்பந்தாட்ட அணியில் சிறந்த வீரராக இப்பாடசாலையில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் எம். பி. எம்.எம்.ரசீனுக்கு வெற்றிக் கிண்ணத்தை ஊடகவியலாளர் ஏ.ஸி.ஏ.ஸலாம் வழங்கினார்.

மாணவர்களுக்கு திறமையாக எம். எம். சஹாஸ் அஹமட் பயிற்சி அளித்தமை குறிப்பிடத்தக்கது. வெற்றியீட்டிய அணிக்கான வெற்றிக் கிண்ணத்தை மஞ்சள் அணியினருக்கு வித்தியாலய அதிபர் எம். ஜே. எம். மன்சூர் வழங்கினார்.

# ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய சூப்பர் கிங் ஆசிரியர்கள் அணி வெற்றி



**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

ஒலுவில் அல்ஹம்றா சூப்பர் கிங் ஆசிரியர்கள் அணிக்கும் ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணிக்கும் இடையிலான சினேக பூர்வ மென்பந்து கிரிக்கெட் போட்டி பாடசாலை மைதானத்தில் வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்றது.

இப்போட்டியில் அல்ஹம்றா மகா வித்தியாலய ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி மூன்று ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 4 விக்கெட் இழப்பிற்கு 110 ஓட்டங்களை பெற்றனர்.

111 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹம்றா பிர்லியன் போய்ஸ் மாணவர்கள் அணி 8 ஓவர்கள் முடிவில் 108 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். இதனடிப்படையில் 3 ஓட்டங்களால் ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணியின் ஆசிரியர் முஹம்மட் றிஸாட் (55 ஓட்டங்கள்) தெரிவானார். மிகவும் சுவாரஷ்யமாக அமைந்த இந்தப் போட்டி, இறுதிக்கட்டம் வரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது. ஹம்றா பிர்லியன்போய்ஸ் மாணவர்கள் அணி இறுதி ஓவரில் ஒரு பந்துக்கு 04 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் துடுப்பெடுத்தாடி தோல்வியை தழுவிக் கொண்டனர். இங்கு அதிதியாக கலந்துகொண்ட பாடசாலையின் உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீம் வெற்றி பெற்ற ஹம்றா சுப்பர் கிங் ஆசிரியர்கள் அணித்தலைவர் ஆசிரியர் ஆர்.நௌஸாட் உள்ளிட்ட வெற்றி அணியிடம் கேடயத்தினை வழங்கி கௌரவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் வீர, வீராங்கனைகள் விபரம் சேகரிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தரவுகள் மாவட்ட செயலகத்தினால் கோரப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சர்வதேசமட்டங்களில் பங்கு பற்றிய மற்றும் தேசிய விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றியீட்டிய விளையாட்டு வீர, வீராங்கனைகளின் தரவுகளை ஆவணப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக மேற்படி விளையாட்டு வீர, வீராங்கனைகளின் விபரங்கள் ஆவணப்படுத்தும் நோக்கில கோரப்படுகின்றது.

மேற்படி விண்ணப்பங்களை ஏ4 தாளில் தயாரித்து உரியசான்றிதழ்களின் பிரதிகளுடன் தங்களது பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலகத்திலோ அல்லது மட்டக்களப்பு மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவிலோ தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 25.04.2022ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பத்தினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 13ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.